பக்கங்கள்: 12 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 03 | வள்ளுவர் ஆண்டு 2049 | கார்த்திகை 13 | வியாழக்கிழமை 29.11.2018 | கதிர் 24

### இது ரகசியம் அல்ல!

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லை என்பதை ஒப்புக்கொண்டு, பிரதமர் பதவியை இராஜினாமாச் செய்வதே இன்றைய நிலையில் பொருத்தமானதாக இருக்கும் எனச் சுதந்திரக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் சிலர் நேற்று மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து எடுத்துரைத்தனர் பக்கம் 02

## கொழும்பில் 11 தமிழர்கள் கடத்தல்;

# படைகளின் பிரதானி ரவீந்திர நேற்று கைது

## பிணை விண்ணப்பம் நிராகரிப்பு



கொழும்பு, நவம்பர் 29

பாதுகாப்புப்படைகளின்பிரதானியான அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன நேற்று நீதிமன்றில் சரணடைந்ததை அடுத்துக் கைது செய்யப்பட்டார்.

அவரைப் பிணையில் விடுவிக்குமாறு முன்வைக்கப்பட்ட விண்ணபத்தை நிராகரித்த கொழும்பு கோட்டை நீதிமன்ற நீதிவான் ரங்கன தசநாயக்க, சந்தேகநபரை வரும் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார். பக்கம் 11

## ஊடகவியலாளரைத் தாக்கினார் அட்மிரலின் பாதுகாப்பு அதிகாரி




கொழும்பு, நவ. 29

கொழும்பு – கோட்டை நீதிவான் நீதிமன்றத்தில், நேற்று விசாரணைக்காக முன்னி பக்கம் 11

## மாவீரர் நாள் ஏற்பாட்டாளரின் வீடு மீது நள்ளிரவில் தாக்குதல்

### பருத்தித்துறையில் சம்பவம்



யாழ்ப்பாணம், நவ. 29

பருத்தித்துறை சுப்பர் மடம் பகுதியில் மாவீரர் நாள்நினைவேந்தல்நிகழ்வுகளை ஒழுங்கமைத்தவரின் வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகளை நேற்று முன் தினம் ஒழுங்கமைத்து நடத்தியவர் வீட்டுக்குள் நள்ளிரவு வேளை பக்கம் 11

## கெஹலிய பதவி நீக்கம்



கொழும்பு, நவ. 29

அமைச்சரவைப் இணைப் பேச்சாளர் பதவியில் இருந்து, கெஹலிய ரம்புக்வெல நேற்றுத் பக்கம் 11

## ஆவா குழு தலைவர் அசோக் மல்லாகம் நீதிமன்றில் சரண்!

### அவரை மறியலில் வைக்க உத்தரவு

யாழ்ப்பாணம், நவ. 29

ஆவா குழுவின் தலைவர் என அடையாளப்படுத்தப்பட்டு பொலிஸாரால் தேடப்பட்டு வந்த அசோக் என்ற இளைஞன் மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் நேற்று சரணடைந்தார்.

அவரை பக்கம் 11

## சபாநாயகருக்கு ஆதரவாக குடாநாட்டில் சுவரொட்டி!



யாழ்ப்பாணம், நவ. 29

சபாநாயகர் கரு ஜயசூரியவை ஆதரித்தும் அவருக்கு வாழ்த்துத் தெரிவித்தும் பக்கம் 11

## இலங்கையில் நேரில் களமிறங்கியது ஐ.நா.

### கூட்டமைப்புடன் மரி யமஷிட்டா முக்கிய பேச்சு கொழும்பு அரசியலில் பெரும் பரபரப்பு

கொழும்பு, நவ. 29

இலங்கையில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டுள்ள பரபரப்பான தற்போதைய சூழ்நிலையில் அது குறித்து ஆராய்வதற்காக ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் விவகார திணைக்களத்தின் ஆசிய பசுபிக் பக்கம் 11

## சபையில் ஆளும் தரப்பின் புறக்கணிப்பு தொடரும்!

கொழும்பு, நவ. 29

அடுத்துவரும் நாடாளுமன்ற அமர்வுகளைப் புறக்கணிக்க அரச தரப்பு தீர்மானித்துள்ளதாக வீட்டு பக்கம் 02

## 7 ஆம் திகதிக்கு பிறகே அடுத்த கட்ட நகர்வு

### அரசு நேற்று அறிவிப்பு




கொழும்பு, நவ. 29

டிசம்பர் 07 ஆம் திகதிக்கு பின்னரே மைத்திரி, மஹிந்த கூட்டணியின் அடுத்த கட்ட அரசியல் நகர்வுகள் முன்னெடுக்கப்படும். அதுவரை பக்கம் 11

## மஹிந்தவுக்கான நிதிகளை வெட்டும் பிரேரணை மீது இன்று வாக்கெடுப்பு!

கொழும்பு, நவ. 29

பெரும் அரசியல் பரபரப்புக்கு மத்தியில் நாடாளுமன்றம் இன்று முற்பகல் 10.30 மணிக்கு சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் கூடவுள்ளது. மஹிந்த ராஜபக்ஷவின் பிரதமர் செயலகத்துக்கான நிதி ஒதுக்கீடு பக்கம் 02

## லீசிங் நிறுவன அலுவலர்கள் இருவருக்குக் கடூழியச் சிறை

### யாழ். நீதிவான் தீர்ப்பு

யாழ்ப்பாணம்,நவ. 29

லீசிங் தவணைப் பணத்தை வசூலிப்பதற்காக வாடிக்கையாளரின் வீடு தேடிச் சென்று வீட்டிலிருந்த குடும்பப் பெண்ணை அச்சுறுத்தி பக்கம் 11

## மிரட்டல்களுக்கு அடிபணியாமல் மாவீரர்களை மனதார நினைவு கூர்ந்துள்ளது தமிழர் தாயகம்

### சம்பந்தன் திருப்தி; நாடாளுமன்ற அமர்வால் தான் நேரில் பங்கேற்க முடியவில்லை எனவும் வருத்தம் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 29

மிரட்டல்கள் – நெருக்குதல்கள் – அச்சுறுத்தல்களுக்கு அடிபணியாமல் தடைகளைத் தகர்த்தெறிந்து மாவீரர்களை வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தாயக மக்கள் பகிரங்கமாக துயிலும் இல்லங்களில் நினைவுகூர்ந்துள்ளார்கள். இது எமக்குத் திருப்பதியை – மன நிறைவை அளிக்கின்றது.

– இவ்வாறு தமிழ்த் பக்கம் 11

# ஆளுங்கட்சித் தரப்பினரின் ஆசனங்களை இன்று அதிரடியாக ஆக்கிரமிக்க ஐ.தே.கவினர் திட்டம்?

கொழும்பு, நவ.29

தாங்களே இன்னும் சட்டபூர்வமான அரசுக்கு உரியவர்கள் என்று உரிமை கோரி வரும் ஐக்கிய தேசியக் கட்சியையும் உள்ளடக்கிய ஐக்கிய தேசிய முன்னணியினர், நாடாளுமன்றத்தில் தற்போது ஆளும் தரப்பாக இருக்கும் சு.க. – பொதுஜன பெரமுன கூட்டைச் சேர்ந்தோர் சபை நடவடிக்கைகளைப் பகிஷ்கரிக்கின்றமையைப் பயன்படுத்தி ஆளும்கட்சித்தரப்பு ஆசனங்களைத் தாங்களே ஆக்கிரமிக்கும் அதிரடி நடவடிக்கையில் இறங்கத் திட்டமிட்டிருக்கின்றனர் எனத் தகவல்கள் கசிந்துள்ளன.

இன்று நாடாளுமன்ற அமர்வுகள் இடம்பெறும் போது, தாங்கள் ஆளும்கட்சியின் ஆசனத்தில் அமரப் போகிறார்கள் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

இன்று மோசமான அரசாங்கம் ஒன்று உள்ளதாகவும் அதனை எந்தவொரு நாடும் ஏற்றுக்கொள்ளவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறை தொடர்பில் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியில் ஆசனம் பெறுவதற்கு வியாழனன்று தீர்மானிப்பார்கள்– என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சபாநாயகரின் செயற்பாடுகளுக்கு எதிர்ப்பு வெளியிட்டு ஆளும் கட்சியினர் நாடாளுமன்றத்தை புறக்கணித்து வருகின்றனர். இந்நிலையில் ஆளும் கட்சியினரின் ஆசனத்தை ஆக்கிரமிப்பததற்கு ஐக்கிய தேசிய கட்சி திட்டமிட்டுள்ளது. இதன் காரணமாக இன்று நாடாளுமன்றத்தில் பதற்றமான நிலை ஒன்று ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன எனக் குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை நேற்று முன்தினம் நாடாளுமன்ற அமர்வின் போது, ஆளும்கட்சியின் ஆசனங்கள் வெறுமையாக உள்ளன. நாம் அந்தப் பகுதியில் அமரப் போகிறோம் – என பதவி கவிழ்க்கப்பட்ட முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# பிரதமர் பதவியைத் துறக்குமாறு மஹிந்தவிடம் சு.க. கோரிக்கை!

கொழும்பு, நவ. 29

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாத நிலையில், உடனடியாகப் பிரதமர் பதவியிலிருந்து விலகிக் கொள்ளுமாறு, சர்ச்சைக்குரிய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழுவொன்று கோரிக்கை விடுத்துள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவை நேற்றுக் காலை சந்தித்த சுதந்திரக் கட்சியின் 15 நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தக் கோரிக்கையை விடுத்தனர் என்று கொழும்பு ஆங்கில ஊடகமான சிறிலங்கா மிரர் செய்தி வெளியிட்டுள்ளது.

உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, தொந்தரவு கொடுக்காமல், உடனடியாகப் பிரதமர் பதவியிலிருந்து விலகுமாறு, சுதந்திரக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மஹிந்தவிடம் கோரியுள்ளனர்.

எனினும் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு எதிர்வரும் 7ஆம் திகதி அளிக்கப்படும் வரை, பதவியிலிருந்து விலகிக் கொள்ளும் எண்ணம் தனக்குக் கிடையாது என்று மஹிந்த தெரிவித்துள்ளார்.

தேவைப்பட்டால், தன்னைப் பதவியில் இருந்து நீக்குமாறு ஜனாதிபதியிடம் கூறும்படியும் அவர் கூறியுள்ளார்.

தான் பதவியில் நீடிப்பதால், மைத்திரிபால சிறிசேனவை நாட்டு மக்கள் விமர்சிப்பார்கள் என்றும் தன்னை விமர்சிக்கமாட்டார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதியின் உத்தரவுக்குச் சாதகமாக உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தால், நாடாளுமன்றம் கலைக் கப்பட்டுத் தேர்தல் நடத்தப்படும் என்றும், பாதகமான தீர்ப்பு அளிக்கப் பட்டால், தான் 113 உறுப்பினர்களின் பெரும்பான்மையை நிரூபிப்பேன் என்றும் மஹிந்த சவால் விடுத்துள்ளார்.

இதேவேளை, பிரதமர் மஹிந்த பெரும்பான்மையை நிரூபிக்க முடியாது போனால் அவராகவே பதவி விலகும் முடிவை எடுப்பார் என்று தான் நம்புவதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என அறியவருகின்றது.

போகின்ற போக்கில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்படக் கூடிய தீர்மானங்கள் மூலம் அரசு ஊழியருக்கு வேதனம் கூட வழங்க முடியாத இக்கட்டு நிலை வரலாம் என்றும் –

இந்தப் போக்கில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சு.க., பொதுஜன பெரமுனை ஆகிய எல்லாத் தரப்பினரதும் அரசியல் செல்வாக்குச் சரிந்து வருகின்றது என்றும் –

அவர்கள் மஹிந்தரிடம் எடுத்துரைத்திருக்கின்றனர் என அறிய வந்தது.

ஆனால், பிரதமர் பதவியைத் தூக்கி எறியும் 'மூட்' டில் மஹிந்தர் இல்லை என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.

நாடாளுமன்றக் கலைப்புத் தொடர்பான உயர்நீதிமன்றத் தீர்ப்பு இன்னும் பத்து நாள்களுக்குள் வந்துவிடும். அதுவரை அரசை கொண்டிழுத்துப் பார்க்கலாம். தீர்ப்புச் சாதகமாக வந்தால், பிரதமர் பதவியிலும் அரசிலும் தொடர்ந்தபடி பொதுத் தேர்தலை எதிர்கொள்ளலாம். தீர்ப்புப் பாதகமாக வந்தால் அப்போது மாற்று ஏற்பாடு குறித்துச் சிந்திக்கலாம் என்ற சாரப்பட மஹிந்த ராஜபக்ஷ தரப்பு, அவர்களுக்கு பதிலளித்திருப்பதாக அறியவந்தது.

நாடாளுமன்றத்தில் அரசை நிலைநிறுத்துவதற்குத் தேவையான 113 எம்.பிக்களின் ஆதரவு என்ற விடயத்திலும் மைத்திரிபால சிறிசேன – மஹிந்தர் தரப்புக்கு இடையில் சிறு கீறல் ஏற்படிருப்பதாகவும் கூறப்படுகின்றது.

தேவையான எம்.பிக்களைத் திரட்டுவது மஹிந்தவின் பொறுப்பு என்று ஜனாதிபதி சிறிசேனவும் –

இல்லை, அது ஜனாதிபதியின் வேலை என்று மஹிந்த தரப்பும் –

இடைத்தரகர்கள் மூலம் தமக்குள் கருத்துப் பரிமாறி, குழம்பிப் போய் இருக்கின்றன என்று விடயமறிந்த வட்டாரங்கள் நம்பகமாகத் தகவல் வெளியிட்டன.

மைத்திரி – மஹிந்த தரப்புக்கு இடையில் ஒக்டோபர் 26 ஆம் திகதி ஆரம்பமான தேனிலவு ஏற்கனவே கசக்கத் தொடங்கி விட்டது என்றும், பல முறுகல் விடயங்கள் வெளிச்சத்துக்கு வராமல் அரங்கேறிக் கொண்டிருக்கின்றன என்றும் கூடக் கூறப்பட்டது.

இன்று நாடாளுமன்றத்தில் ஐக்கிய தேசிய முன்னணி தொடர்ந்தும் காட்டமான நிலைப்பாட்டை வெளிப்படுத்தி, ஒற்றுமைப்பட்டு ஐக்கியமாக நின்று காய்களை நகர்த்துமானால், மேற்படி தேன்நிலவின் முடிவு பற்றியும், விவாகரத்துக்கான முதல் அறிவிப்பும் விரைவில் வெளியாகும் என நம்புகின்றது அந்த அரசியல் வட்டாரம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மீதான தனது ஆளுமையை, அவரது தற்போதைய எஞ்சிய ஒரு வருடப் பதவிக் காலம் வரை விட்டு விடாமல் தனது கையில் வைத்துக் கொண்டே அரசியல் காய் நகர்த்தல்களைத் தொடர்வதற்கு மஹிந்தர் விரும்புகின்றார். ஆனால் அது அசாத்தியமானது, நீடிக்க வாய்ப்பற்றது என்கின்றன இருதரப்புகளுடனும் நெருக்கமாகப் பழகும் ஊடக வட்டாரங்கள்.

எது, எப்படி என்றாலும் மலிந்தால் விவகாரம் சந்தைக்கு – சந்திக்கு – வரும்தானே...! அது வரைப் பார்த்திருப்போம்.

-மின்னல்-

### மஹிந்தவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை இடைநிறுத்தும் பிரேரணை மீது இதன்போது வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது.

இதற்கான பிரேரணையை ஐக்கிய தேசிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் பங்காளிக் கட்சிகள் அண்மையில் நாடாளுமன்ற செயலரிடம் கையளித்தன.

எனினும், கடந்த இரண்டு சபை அமர்வுகளை புறக்கணித்தது போல் இன்றும் மஹிந்த அணி சபை அமர்வைப் பகிஷ்கரிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு அஞ்சுவதால் மைத்திரி – மஹிந்த கூட்டணி சபைக்கு வராது என்று ஐக்கிய தேசியக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஆகியனவும் மஹிந்த ராஜபக்ஷவின் பிரதமர் செயலகத்துக்கான நிதி ஒதுக்கீடுகளை இடைநிறுத்தும் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கவுள்ளன.

அதேவேளை, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் ஆளும்கட்சியின் நாடாளுமன்றக்குழுக் கூட்டம் இன்று காலை நடைபெறவுள்ளது. (ஐ)

# சம்பந்தனின் பதவிக்கு ஆபத்து இல்லையாம்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தன் எதிர்க்கட்சித் தலைவராகச் செயற்படுவதில் தமக்கும் எவ்வித பிரச்சினையும் இல்லை என்றும் அவர் தனது பதவியை சரியாக வகிக்கின்றார் என்ற நிலைப்பாடு தமக்கு உள்ளதாகவும் அமைச்சரவைப் பேச்சாளர் மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

# மஹிந்தவின் நியமனத்துக்கு எதிராக தம்பர அமில தேரர் நீதிமன்றில் மனு

கொழும்பு, நவ. 29

இலங்கையின் புதிய பிரதமராக மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கப்பட்டதற்கு எதிராக உயர்நீதிமன்றத்தில், அடிப்படை உரிமை ஒன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வண. தம்பர அமில தேரர் நேற்று இந்த மனுவை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தார்.

ரணில் விக்கிரமசிங்கவைப் பிரதமர் பதவியில் இருந்து நீக்கியும், மஹிந்த ராஜபக்ஷவைப் பிரதமராக நியமித்தும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வெளியிட்ட வர்த்தமானி அறிவிப்புகளைச் செல்லுபடியற்றதாக அறிவிக்குமாறும் அவர் கோரியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த உத்தரவு அடிப்படை உரிமைகளை மீறும் செயல் என்று உத்தரவிடுமாறு கோரியுள்ள தம்பர அமில தேரர், இந்த மனு மீது உயர்நீதிமன்றம் தீர்ப்பளிக்கும் வரை, பிரதமராக மஹிந்த செயற்படவும், அவரது அமைச்சரவையில் உள்ளவர்கள் அமைச்சர்களாகப் பணியாற்றவும் இடைக்காலத் தடைவிதிக்குமாறும் கேட்டுள்ளார். (ஐ)

# சிறைச்சாலைகளில் பரீட்சை நிலையம்

கொழும்பு, நவ. 29

இவ்வருடம் நடைபெறவுள்ள கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சை, டிசம்பர் மாதம் மூன்றாம் திகதி ஆரம்பமாகவுள்ளது. பரீட்சைக்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித்த தெரிவித்துள்ளார்.

அத்துடன் கொழும்பு, இரத்மலானை, தங்காலை, மாத்தறை, சிலாபம் ஆகிய மகசீன் சிறைச்சாலைகளிலும் விசேட பரீட்சை மத்திய நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதி அட்டைகள், தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமையுடன், அவற்றில் ஏதேனும் பிரச்சினைகள் இருப்பின் விரைவாக அது குறித்த தகவல்களைத் தெரிவிக்குமாறும், பரீட்சைகள் திணைக்களம் கேட்டுள்ளது.

இது தொடர்பிலான பிரச்சினைகளை, 1911என்ற உடனடி தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பு விடுத்து அறிவிக்குமாறும், பரீட்சைகள் திணைக்களம் வேண்டியுள்ளது.

இம்முறை 4,661 பரீட்சை மத்திய நிலையங்களில் பரீட்சை நடைபெறவுள்ளதுடன், நான்கு இலட்சத்து 22 ஆயிரத்து 850 பாடசாலை மாணவர்கள் இப் பரீட்சைக்குத் தோற்றுகின்றனர்.

அத்துடன், இரண்டு இலட்சத்து 33 ஆயிரத்து 791 தனியார் பரீட்சார்த்திகள், இம்முறை பரீட்சைக்குத் தோற்றவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

### மாற்றுவலுவுடையோர் தின நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், நவ.29

யாழ்ப்பாணம், திருநெல்வேலி வடக்கில் அமைந்துள்ள வலுவிழந்தோர் புனர்வாழ்வு சங்கம் எதிர்வரும் 03 ஆம் திகதி திங்கட்கிழமை வரும் மாற்று வலுவுடையோர் தினத்தை ஒட்டிய நிகழ்வை நடத்துகிறது. அன்றைய தினம் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை திருநெல்வேலி வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனக் கட்டடத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் நிறுவனப் பொதுசபை உறுப்பினர்கள், நிர்வாகசபை உறுப்பினர்கள் மற்றும் சகல மாற்றுவலுவுடையோர்களையும், மாற்றுவலுவுடையோர் நிறுவனங்களின் சார்பில் பிரதிநிதியொருவரையும் கலந்து கொள்ளுமாறு சங்கம் வேண்டியுள்ளது.

### சபையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வசதி மற்றும் சமூக அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்தார்.

வீடமைப்பு மற்றும் சமூக நலன்புரி அமைச்சில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அத்தோடு ஆளும் தரப்பினர் இன்றி நாடாளுமன்றத்தைக் கூட்ட முடியாது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

### நிஜங்களின் நிழல்கள் ஒளிப்படக் கண்காட்சி

யாழ்ப்பாணம், நவ.29

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி ஒளிப்படக்கலைக்கழகம் நடத்தும் 'நிஜங்களின் நிழல்கள் – 2' ஒளிப்படக் கண்காட்சி இன்றும் நாளையும், நாளை மறுதினமும் கல்லூரி நூலகத்தில் இடம்பெறவுள்ளது.

இன்று நண்பகல் 11.30 மணி முதல் மாலை 4 மணிவரையிலும், நாளையும் மறுதினமும் காலை 9.30 மணி முதல் மாலை 4 மணிவரையிலும் இக்கண்காட்சி இடம்பெறும்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் பேரவையின் அனுசரணையில் நடைபெறும் இந்நிகழ்வில் யாழ் போதனா வைத்தியசாலை உளநல மருத்துவ நிபுணர் வைத்தியர் சி. சிவதாஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (உ)

காலைக்கதிர் Kalaikkathir



# வாள்வெட்டுக் கும்பல்களுடன் பொலிஸாருக்கும் தொடர்பா?

## கேள்வி எழுப்புகிறார் சிவாஜிலிங்கம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், நவ. 29

வாள்வெட்டுக் கும்பல்களுக் கும் பொலிஸாருக்கும் இடையில் தொடர்புள்ளதா எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கேள்வி யெழுப்பியுள்ளார்.

யாழ். ஊடக மையத்தில் நேற்றுப் புதன்கிழமை நண்பகல் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

தமிழர் தாயகப் பகுதிகளான வடக்கு – கிழக்கிலும் புலம் பெயர் தேசங்களிலும் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை மாவீரர் நாள் உணர்வுபூர்வமாக அனுஷ் டிக்கப்பட்டது.

எனினும் வடமராட்சிப் பகுதி யில் மாவீரர் நாள் நிகழ்வை நடத்துவதற்குப் பல்வேறு நெருக் கடிகள் இராணுவம் மற்றும் பொலிஸாரால் ஏற்படுத்தப்பட் டிருந்தன.

மக்கள் தமது உறவுகளை நினைவு கூர்வதற்கு எதிராக தடையேற்படுத்திய இந்த நட வடிக்கைகளைத் தாம் வன்மை யாக கண்டிப்பதாக தமிழ்த் தேசி யக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்–

பருத்தித்துறை சுப்பர் மடம் உட்பட சில பகுதிகளில் சிவில் உடையில் வாள்களுடன் சென்ற பொலிஸார் அங்கிருந்தவர்களி டம் மாவீரர் நாள் நிகழ்வை நடத்தக் கூடாதென்றும் மீறி நடத்தினால் நாலாம் மாடி செல்ல நேரிடும் என்றும் அச்சுறுத்தியுள்ளனர்.

சிவில் உடையில் வாள்களு டன் சென்று பொதுமக்களை



பொலிஸார் மிரட்டுகின்றனர் என்றால் வாள்வெட் டுக் கும்பல் களுக்குப் பொலிஸாரா வாள் கள் விநியோகம் செய்கின்றனர்? அல் லது வாள்வெட்டுக் கும்பல் களை நெறிப்படுத்துகின்றனரா?

தெற்கில் ஒரு நீதியும் வடக்கு, கிழக்கில் ஒரு நீதியும் இருக்க முடியாது. அச்சுறுத்தல்கள் மற் றும் அடக்குமுறை களை மீறி மக்கள் ஒன்று சேர்ந்து செயற்பட் டால் அடக்குமுறையாளர்களால் எதுவும் செய்ய முடியாது – என் றார். (ஐ-07)




# பொதுத் தேர்தலை வலியுறுத்தி கிளிநொச்சியில் நேற்று பேரணி

கிளிநொச்சி, நவ. 29

நாடாளுமன்ற தேர்தலை விரைந்து நடத்து மாறு வலியுறுத்தி கிளிநொச்சியில் ஆர்ப்பாட்ட பேரணியொன்று இடம்பெற்றது.

'நாடாளுமன்ற தேர்தலை அவசரமாக நடத் துங்கள், சபாநாயகரை வெளியேற்றுங்கள்' என்ற வாசகம் பொறிக்கப்பட்ட பதாதையை தாங்கியவாறு, நேற்று இந்த ஆர்ப்பாட்டப் பேரணி நடத்தப்பட்டது.

கிளிநாச்சி காக்கா கடைச் சந்தியிலிருந்து ஆரம்பித்து ஏ-9 வீதி ஊடாகக் கிளிநாச்சி பஸ் நிலையம் வரை இந்தப் பேரணி சென்றது.

இதன்போது, நாடாளுமன்றத் தேர்தலை விரைந்து நடத்துமாறும், ரணிலை வெளியேறு மாறும் ஆர்ப்பாட்டக் காரர்கள் கோஷமெழுப்பினர்.

இந்தப் பேரணியில் வடமத்திய மாகாண முன்னாள் முதலமைச்சர் ரஞ்சித் சமரகோன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் தர்மபால செனவிரத்ன உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# எதிர்வரும் சில மாதங்களில் வாகனங்கள் விலை உயரும்

கொழும்பு, நவ. 29

எதிர்வரும் சில மாதங்களில் வாகனங்களின் விலை அதிகரிக்கப்படும் என வாகன இறக்குமதி யாளர்கள் தெரி வித்துள்ளனர்.

அமேரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளமை மற் றும் தற்போது அரசியலில் ஏற்பட்டுள்ள ஸ்திர மற்ற தன்மை என்பவற்றினால் இந்த மாற்றம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் சில மாதங்களில் வாகனங் களின் விலை நூற்றுக்கு 15 தொடக்கம் 20 சதவீதத்தால் அதிகரிக்கக்கூடும் என கூறப்பட் டுள்ளது.

இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத் தின் தலைவர் இந்திக சம்பத் மெரன்சிகே இதனைத் தெரிவித்தார். (ஐ)

# ஹன்சாட் திரிபுபடுத்தப்பட்டுள்ளது

## நிமல் சிறிபால டி சில்வா குற்றச்சாட்டு

நாடாளுமன்றச்செயற்பாடுகள் தொடர் பான ஹன்சாட் அறிக்கை திரிபுபடுத்தப்பட்டுள்ளதென அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குற்றஞ்சாட்டியுள்ளார்.

அதனால் அந்த அறிக்கையை வெளியிடுவதை நிறுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக அவர் மேலும் கூறினார்.

நாடாளுமன்றக்கட்டத்தொகுதி யில் நேற்று முன் தினம் செவ் வாய்க் கிழமை இடம்பெற்ற செய்தி யாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அத்தோடு, நாடாளுமன்றச் சம் பிரதாயங்களை மீறிச் சபாநாய கர் கரு ஜயசூரிய செயற்படுகின் றார் என்றும், பிரதமர் மற்றும் ஆளுந்தரப்பின்றிச் சபை அமர் வுகளைக் கொண்டு செல்கின் றார் என்றும் அவர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார். (ஐ)



# இடைக்கால கணக்கறிக்கைக்கு அமைச்சரவை செவ்வாய் அனுமதி

கொழும்பு, நவ. 29

2019ஆம் ஆண்டின் முதல் 4 மாதங்களுக்கு தேவையான நிதியுதவியைப் பெற்றுக்கொள் வதற்கான இடைக்காலக் கணக்கறிக்கையை நாடாளு மன்றில் சமர்ப்பிப்பதற்கு தீர் மானிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கணக்கறிக்கைக்கு ஏற்கனவே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்த நிலையில், அதனை நாடாளுமன் றில் சமர்ப்பிப்பதற்கும், அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங் களுக்கும் தற்போது அமைச் சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன தலைமையில் நேற்று முன் தினம் இடம்பெற்ற அமைச்சர வைச் சந்திப்பில் இதற்கான அங்கீகாரம் வழங்கப் பட்டதாக, நேற்று இடம் பெற்ற அமைச் சரவைத் தீர்மானங்களை அறிவிக் கும் ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான மஹிந்த சமர சிங்க தெரிவித்தார்.

நிதி மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர் என்ற ரீதியில், பிரதமர் மஹிந்த ராஜபக்ச இதற் கான பத்திரத்தைத் தாக்கல் செய்வார் எனவும் சமரசிங்க குறிப்பிட்டார்.

அதன் பிரகாரம், 2019ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங் களுக்கு அரசின் பொதுச் சேவை களை முன்னெடுப்பதற்காக, 1735 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட வேண்டுமென மதிப்பிடப்பட்டுள் ளது. (ஐ)

# சிறு குற்றங்களுக்கான அபராதம் புதிய முறையில் அறவிடப்படும்

## ஜனாதிபதி மைத்திரி அறிவுறுத்தல்

கொழும்பு, நவ. 29

போக்குவரத்து அபராதங்கள் உள்ளிட்ட சிறு குற்றங்களுக் கான அபராதத் தொகைகளை மின்னணுச் சாதனம் மூலம் அறவிடுவதற்கான சாத்தியம் குறித்து ஆராயுமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிகாரி களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, போதைப் பொருள் கடத்தல் மற்றும் பாதாள உலகக் குழுவினரின் செயற் பாடுகள் போன்ற குற்றங்களைக் கட்டுப்படுத்த கடுமையான விதி களை நடைமுறைப்படுத்து மாறும் ஜனாதிபதி அறிவுறுத்தி யுள்ளார்.

வீதி விபத்துகளை குறைப்பது தொடர்பில் ஜனாதிபதி செயலகத் தில் நேற்று நடைபெற்ற விசேட கூட்டத்தைத் தொடர்ந்தே ஜனாதி பதி இதனைத் தெரிவித்தார்.

குற்றச்செயல்களைத் தடுக்கும் நோக்கில் பழைய காலாவதியான முறைகளை நீக்கிப் புதிய முறை களை நடைமுறைப்படுத்துவதற் கான சாத்தியத்தை ஆராயுமா றும் ஜனாதிபதி இதன்போது அதி காரிகளுக்குத் தெரிவித்துள் ளார்.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர் களான சுசில் பிரேமஜயந்த, விஜேதாஸ ராஜபக்ஷ, ஜனாதி பதியின் செயலாளர் உதய ஆர்.செனவிரத்ன, சட்டமா அதி பர் ஜயந்த ஜயசூரிய, பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர் னாண்டோ மற்றும் பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தர உள்ளிட்ட பலர் கலந்துக் கொண்டனர். (ஐ)

# மாவீரர்களுக்கு அஞ்சலி செய்ய உறுப்பினர்கள் சிலர் எதிர்ப்பு!

## வவுனியா நகரசபையில் குழப்பம்



வவுனியா நகரசபையில் மாவீரர்களை நினைவு கூரு வதற்கு சபையின் பெரும் பான்மை இன உறுப் பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தமை பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

வவுனியா நகரசபையின் 8ஆவது அமர்வு நேற்றுப் புதன் கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது.

சபை அமர்வின் இடையில் நகர சபை உறுப்பினர் திருமதி லக்ஸ்சனா நாகராஜன் மாவீரர் களை நினைவு கூர்வதற்கு நகரசபை தலைவரிடம் அனுமதி கோரியுள்ளார்.

இதற்குச் சபையிலிருந்த இரண்டு பெரும்பான்மை இன உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித் தமையுடன் மாவீரர் தின நிகழ்வு என்ற பெயரில் நினைவு கூரல் இடம் பெறுவதற்கு ஆட்சேப னையை வெளியிட்டனர்.

இதன் பின்னர் 35வருடங் களாக நாட்டில் இடம்பெற்ற யுத்தத்தின் போது உயிரிழந்த தமிழ் சிங்கள, முஸ்லிம் மக் களுக்கு அஞ்சலி செலுத்த நகர சபைத் தலைவர் இ. கௌதமன் அனுமதி வழங்கினார்.

இதனையடுத்து சபை நிறை வுற்ற பின்னர் மின்குமிழ்கள் அணைக் கப்பட்டு, உறுப்பினர் கள் அனை வரும் கையில் மெழுகுவர்த்தி ஏந்தியவாறு யுத்தத்தின்போது உயிரிழந்த மக் களுக்கும் சேர்த்து தமது அஞ் சலியை செலுத்தினர். (ஐ)

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## தொடரும் மீட்சியற்ற நிலைமை

அடுத்த ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க முடியாத மைத்திரி – மஹிந்த கூட்டு அரசு, அடுத்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கென ஓர் இடைக்கால நிதி நிலை அறிக்கையைத் தயார் செய்திருக்கின்றது.

இந்த நான்கு மாத காலப் பகுதிக்குரிய அரச செலவினங்களை எதிர்கொள்வதற்காக ஒரு லட்சத்து 73 ஆயிரத்து 520 கோடி ரூபா (ரூ.ஆயிரத்து 735 பில்லியன்) பெறுமதியான நிதி நிலை அறிக்கையே தயார் செய்யப்பட்டுள்ளது. நிதி அமைச்சர் என்ற வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இது தொடர்பாக சமர்ப்பித்த இடைக்கால நிதி நிலை அறிக்கையை அமைச்சரவை அங்கீகரித்துமிருக்கின்றது.

அமைச்சரவை அங்கீகாரம் விடயமல்ல. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் தங்களின் விசுவாசிகளையே அமைச்சரவைக்கு நியமித்திருக்கின்றமையால் அங்கு இந்த நிதி நிலை அறிக்கை அங்கீகரிக்கப்பட்டமை விடயமே அல்ல.

அது, நாடாளுமன்ற அங்கீகாரத்தைப் பெற்றால் மட்டுமே செல்லுபடியாகும். இல்லையேல் நாடு சிக்கலை எதிர்கொள்வது தவிர்க்கமுடியாததாக இருக்கும்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டிராத மஹிந்தரின் அரசு நாடாளுமன்ற அமர்வுகளைப் புறக்கணித்து வருகின்றது. சபாநாயகரின் தலைமையை ஏற்க மறுத்துள்ள மஹிந்தரின் 'சிறுபான்மை' அரசு இந்த இடைக்கால நிதி நிலை அறிக்கையை நாடாளுமன்றத்தில் எவ்வாறு அங்கீகரிக்கச் செய்யப் போகின்றது என்பது விடை தெரியாத வினாவாக உள்ளது.

இதுவரை ஆட்சியில் இருந்த 'நல்லாட்சி அரசை' திடீரென ஒருநாள் வெள்ளிக்கிழமை மாலைப் பொழுதில், சத்தம் சந்தடியின்றிக் கலைத்து, வீட்டுக்கு அனுப்பிவிட்டு, நாடாளுமன்றப் பெரும்பான்மையை உறுதி செய்ய இயலாத 'சிறுபான்மை' அரசை ஆட்சிக்குக் கட்டுக்குக் கொண்டு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அதற்குக் கூறிய பிரதான காரணங்களுள் ஒன்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசின் பொருளாதாரக் கொள்கைகள் பயனற்றுப் போய்விட்டன, அக்கொள்கைகள் தோல்வி அடைந்துவிட்டன, நாட்டின் பொருளாதார நிலைமை மோசமாகிவிட்டது என்பதாகும்.

ஆனால் அவர் புதிதாகக் கொண்டு வந்த மஹிந்த ராஜபக்ஷ அரசின் கடந்த ஒரு மாத காலத்தில்தான் நாடு மிக மிக மோசமான பொருளாதார வீழ்ச்சியையும் பின்னடைவையும் கண்டிருப்பதாக பொருளாதார நிபுணர்கள் கூறுகின்றனர்.

அமெரிக்க டொலருக்கு எதிரான ரூபாவின் பெறுமதி மிக மோசமான வீழ்ச்சியைக் கண்டிருக்கின்றது. இப்போது ஒரு டொலருக்கு எதிராக ரூபாவின் பெறுமதி 182 ஐ எட்டிவிட்டது. போகின்ற போக்கில் இருநூறு ரூபாவை அது எட்டினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தம்பாட்டில் ஆரம்பித்த அரசியல் சித்து விளையாட்டினால் ஏற்பட்ட அரசியல் குழப்பம் காரணமாக இந்த ஒரு மாத காலத்துக்குள் அரசு 72 ஆயிரம் கோடி ரூபா பெறுமதியான நிதி உதவிகள், கடன் உதவிகள், உதவித் திட்டங்கள் போன்றவற்றைக் கோட்டை விட்டிருப்பதாகவும் பொருளாதார நிபுணர்களை மேற்கோள்காட்டி செய்திகள் வெளியாகியுள்ளன.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவு தொகை, அமெரிக்கா, ஜப்பான் உட்பட பல நாடுகளின் பரிய அபிவிருத்தி உதவிகள் என்பன நாட்டில் நிலவும் ஸ்திரமற்ற அரசியல் நிலைமை காரணமாகத் தடைப்பட்டுப் போயிருக்கின்றன.

தென்னிலங்கை சுற்றுலாத்துறை வட்டாரங்களின் தகவல்களின்படி, பல உல்லாசப் பயணிகள் ஹோட்டல்களில் முப்பது வீத முற்பதிவுகள் திடீரென ரத்துச் செய்யப்பட்டிருக்கின்றன.

இவ்வளவும் நடந்து, நாடு பெரும் பொருளாதார களேபர வீழ்ச்சியை நோக்கி மோசமாக சரிந்து கொண்டிருக்கும் போது 'ரோம் பற்றி எரியும் போது பிடில் வாசித்துக் கொண்டிருந்த நீரோ மன்னர் மாதிரி' நாட்டின் தலைவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஏதோ இங்குள்ள ஐந்து அல்லது ஆறு மேற்குலக ராஜதந்திரிகள்தாம் குழப்பம் விளைவிக்கின்றனர், மற்றப்படி எல்லாம் இங்கு ஒழுங்காக நடக்கின்றன என்று 'காண்டம்' வாசித்துக் கொண்டிருக்கின்றார்.

பொருளாதார நிலைமை போகின்ற போக்கில் நாட்டிற்கு மீட்சியே இல்லை என்றே தோன்றுகின்றது. எல்லாம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் அரசியல் குளறுபடிகளால் தேர்ந்த விபரீதங்கள்தாம்.

# அரசியல் சதித் திட்டத்துக்கு நாமல் குமார பயன்பட்டார்

## ரஞ்சித் மத்தும பண்டார குற்றச்சாட்டு

நாட்டின் அரசியல் சதித்திட்டத்திற்கு நாமல் குமார என்பவர் பயன்படுத்தப்பட்டுள்ளாரென ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார குற்றஞ்சாட்டியுள்ளார்.



நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

நாமல் குமார என்பவர் பொலிஸாருக்கு உளவுத் தகவல்களை வழங்கியவர். இதற்கு முன்னர் அவன்ட் கார்ட் நிறுவனத்திலும் பணியாற்றியுள்ளார். அவர் வெளியிட்ட குரல் பதிவுகளில் ஜனாதிபதி மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோரைக் கொலை செய்யச் சதித்திட்டம் தீட்டப்பட்டமை தொடர்பாக எந்த இடத்திலும் குறிப்பிடப்படவில்லை.

இன்று தாமரை மொட்டுச் சின்னத்தில் நாமல் குமார போட்டியிடப் போகிறார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ள நிலையில், நாட்டின் அரசியல் சூழ்ச்சிக்கு நாமல் குமார பயன்படுத்தப்பட்டுள்ளார் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

ஜனாதிபதி மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் உள்ளிட்ட முக்கியபிரமுகர்களைக் கொலை செய்ய சதித் திட்டம் தீட்டப்பட்டதாக முதலில் நாமல் குமாரவே தகவல் வெளியிட்டார். ஊழல் எதிர்ப்புப் படையணியின் பிரதானியாக செயற்படும் இவர் வெளியிட்ட தகவல், பின்னர் நல்லாட்சியை பிளவுபடுத்தி ஆட்சி மாற்றத்திற்குப் பிரதான காரணமாக அமைந்து விட்டது – என்றார். (ஐ)

## மைத்திரி கொலைச் சதி விவகாரம்; ரிஷாத் நான்காம் மாடிக்கு அழைப்பு

கொழும்பு, நவ. 29

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிசாட் பதியூதின் நான்காம் மாடி எனப்படுகின்ற சி.ஐ.டிக்கு (குற்றப் புலனாய்வுப் பிரிவு) விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற சபைஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சி தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியில் மக்கள் காங்கிரஸ் பங்காளிக் கட்சியாக அங்கம் வகிக்கின்றது.

அரசமைப்பின் பிரகாரமே ஆட்சி மாற்றம் இடம்பெறவேண்டும் என்றும், சூழ்ச்சி நடவடிக்கைக்குத் துணை போக முடியாது என்றும் ரிஷாத் திட்ட வட்டமாக அறிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு பின்புலத்தில் ரிஷாத் விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டுள்ளமை குறித்து அரசியல் களத்தில் பலகோணங்களில் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

அரசமைப்பின் பிரகாரம் செயற்படுமாறே எமது மார்க்கம் சொல்கின்றது. அதை எம்மால் மீற முடியாது. சூழ்ச்சிக்கு துணைபோக முடியாது.

எனக்குக் கொலை அச்சுறுத்தல் இருக்கின்றது. நாமல் குமார என் பெயரைப் பயன்படுத்தியுள்ளார். ஆனால், எனது பெயர் மாத்திரம் ஊடகங்களில் இருட்டடிப்புச் செய்யப்பட்டது. எனது கட்சியின் தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள் இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்தனர்.

இருந்தும் எனது பாதுகாப்பு குறைக்கப்பட்டுள்ளது. என்னிடம் வாக்குமூலம் பெறவேண்டும் என சி.ஐ.டியின் பணிப்பாளர் கோரியுள்ளார். சிறுபான்மையின மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவன் என்பதாலா எமக்கு இப்படியெல்லாம் நடக்கின்றது? – என்றார் ரிஷாத். (ஐ)

## தந்தையை பொல்லால் அடித்து படுகொலை செய்தார் மகன்!

### காசல்ரீ பகுதியில் கொடூரம்



கொழும்பு, நவ. 29

நோட்டன்பிரிட்ஜ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காசல்ரீஜன பதய பகுதியில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் தனது தந்தையைப் பொல்லால் அடித்துப் படுகொலை செய்த மகனை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். மன நோயாளியான மகனுக்கும் தந்தைக்கும் இடையில் ஏற்பட்ட முறுகலை யடுத்தே, தந்தை பொல்லால் தாக்கி கொலைப்பட்டுள்ளார் என்று பொலிஸார் மேற்கொண்ட ஆரம்பக் கட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

உயிரிழந்த நபர் நான்கு பிள்ளைகளின் தந்தை என்றும், மன நோயாளியான மகன் தினந்தோறும் சண்டையிடுவார் எனவும் நேற்று முன்தினம் இரவிலிருந்து சண்டை உக்கிரமடைந்த நிலையிலேயே இவர் உயிரிழந்தார் எனவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை ஹற்றன் கைரேகை அடையாளப்பிரிவு மற்றும் நோட்டன்பிரிட்ஜ் பொலிஸும் இணைந்து முன்னெடுத்து வருகின்றன.

சடலம் தற்போது டிக்கோயா கிளங்கன் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. ஹற்றன் நீதவானின் மேற்பார்வையின் பின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நாவலப்பிட்டி சட்ட மருத்துவ அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த கொலை தொடர்பாக மேலதிக விசாரணைகளை நோட்டன்பிரிட்ஜ் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ஐ)


### பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்பு செயற்பாடு

16
2018

(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

பெண்கள் வெறும் பாலியல் பொருளல்ல.

தரணி எங்கும் தடம் பதிக்கும் மனித வர்க்கம் அவள் என இன்றைய சமூகத்தின் சிந்தனையில் மாற்றத்தை விதைத்திடுவோம்

யாழ் சமூக செயற்பாட்டு மையம்

JSAC


### வட மாகாண மரநடுகை மாதம் கார்த்திகை – 2018

"பூட்டன் நாட்டிய பனைமரம் காய்க்கிறது
பாட்டன் நட்ட பலாமரம் பூக்கிறது
வெட்டி எரித்ததன்றி நீயென்ன நிழல் வைத்தாய்
மாசடையாச் சூழல் சாவடையா வாழல்!"

- கவிஞர் புதுவை இரத்தினதுரை

### நாளை

30.11.2018
வெள்ளிக்கிழமை
நட்சத்திரம்: மகம் மு.ப. 8.45 வரை
திதி: அட்டமி மு.இ.7.55 வரை
சுபநேரம்: 6.14 – 7.44 வரை
இராகுகாலம்: 10.44 – 12.14 வரை

# கரைச்சி பிரதேச சபை அமர்வுக்கு நேற்றுப் பொலிஸார் வரவழைப்பு

## முரண்பாடு முற்றியதால் தவிசாளர் நடவடிக்கை

கிளிநொச்சி, நவ. 29

கரைச்சி பிரதேச சபையின் விசேட அமர்வு தவிசாளர் மற்றும் சுயேச்சைக்குழு உறுப்பினர்களுக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இரண்டு முறை ஒத்திவைக்கப்பட்டது.

சம்பவஇடத்துக்குப்பொலிஸார் வரவழைக்கப்பட்டபின்னர்அமர்வு சுமூகமாக இடம்பெற்றது.

கரைச்சிப் பிரதேச சபையின் விசேட அமர்வு நேற்றுப் புதன் கிழமை காலை 9.15 மணிக்கு ஆரம்பமாகியது.

இதன்போது தவிசாளர் மற்றும் சுயேச்சைக்குழு உறுப்பினர்களுக்கிடையில் முரண்பாடு எழுந்துள்ளது.

சபை உறுப்பினரை வெளியேறுமாறு தெரிவித்த தவிசாளர், அவர் மறுப்பு தெரிவித்த நிலையில் செயலாளரைக் கொண்டு பொலிஸாரைவரவழைத்துள்ளார்.



இவ்விடயம் தொடர்பில் கரைச்சிப் பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதனிடம் வினவிய போது, இன்றைய விசேட அமர்வில் இரண்டு முக்கிய விடயங்கள் குறித்து உரையாடப்பட்டதாகவும், அதற்கு மாறான சில விடயங்களை உரையாடியபோதே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகவும் கூறினார்.

எதிர்த் தரப்பு உறுப்பினர் ஒருவர் பசுமைப் பூங்காவில் பிரதேச சபைக்குச் சொந்மான பிரதேசத்தில் கேள்வி கோரல் எதுவுமின்றிதனிநபர்ஒருவருக்கு வியாபார நிலையம் ஒன்று வழங்கப்பட்டுள்ளது. சட்ட நடைமுறைகள்எதுவும்பின்பற்றாது இவ்வாறு வியாபார நிலையங்கள் வழங்கப்படுவது ஏற்றுக்கொள்ள முடியாது – என்றார்.

இதன்போது குறுக்கிட்ட தவிசாளர் விசேட அமர்வில் இதுபற்றிபேசமுடியாது–என்றார்.

ஆனால் மறுப்புத் தெரிவித்த எதிர்தரப்பு உறுப்பினர் தனக்கு இந்த விடயம் தொடர்பில் பதிலளிக்கவேண்டும் – என்றார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் மற்றொரு உறுப்பினர் தவிசாளரை நோக்கி ஏற்கனவே சந்தையில் வியாபாரம் நிலையம் வைத்திருந்த ஒருவருக்கே பசுமைப் பூங்காப் பிரதேசத்திலும் சபை நடைமுறைகளை மீறி வியாபார நிலையம் வழங்கப்பட்டுள்ளது– என்றார்.

கை நீட்டிப் பேசவேண்டாம் எனத் தவிசாளர் உறுப்பினரைப் பார்த்து கூறியபோது பதிலுக்கு உறுப்பினரும் தவிசாளரும் கை நீட்டிப் பேசக்கூடாது – என்றார்.

இந்தக் கருத்து மோதலின் உச்சக் கட்டத்தில் உறுப்பினரான இ. இளங்கோ என்பவரை முப்பது நிமிடங்களுக்குச் சபையிலிருந்து வெளியேற்றுவதாக தவிசாளர் அ. வேழமாலிகிதன் அறிவித்தார். அதனை உறுப்பினர் ஏற்க மறுக்கப்பிரதேசசபையின் செயலாளர் க. கம்சநாதனைப் பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பிச் சபை மண்டபத்திற்குள் பொலிஸார் அழைக்கப்பட்டனர்.

பொலிஸார் சபை மண்டபத்துக்குள் வந்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்த எதிர்த் தரப்பு உறுப்பினர்கள் உடனடியாகப் பொலிஸாரை சபையிலிருந்து வெளியேறுமாறு கோரினர். (ஐ)

## வெளிவிவகார அமைச்சரை சந்தித்துப் பேசிய சீனத் தூதர்



கொழும்பு, நவ. 29

இலங்கைக்கான சீனத்தூதுவர் சென் ஷியுவான் நேற்று முன் தினம் வெளிவிவகார அமைச்சர் சரத் அமுனுகமவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

கொழும்பில் உள்ள வெளிவிவகார அமைச்சில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

சீனத் தூதரக அதிகாரிகள் குழுவொன்றும், வெளிவிவகாரச் செயலர் ரவிநாத் ஆரியசிங்க உள்ளிட்ட அதிகாரிகள் குழுவும் இந்தப் பேச்சுக்களில் பங்கேற்றன.

இலங்கையின் தற்போதைய சர்ச்சைக்குரிய அரசு பதவியேற்ற பின்னர், சீனத் தூதுவர், இலங்கை அரசின் உயர்மட்டங்களுடன் இரு தரப்பு விவகாரங்கள் குறித்துப் பேச்சுக்களை நடத்துவது இது இரண்டாவது முறையாகும். (ஐ)

## 70 நீதிபதிகளுக்கு இடமாற்றம்

கொழும்பு, நவ. 29

வருடாந்த இடமாற்ற நடவடிக்கையின் கீழ், மாவட்ட நீதிபதிகள், நீதவான் நீதிபதிகள் உட்பட நீதிமன்றத்தில் சேவையாற்றும் 70 பேருக்கு, நீதிச் சேவைகள் ஆணைக்குழு இடமாற்றங்களை வழங்கியுள்ளது.

அடுத்த வருடம் ஜனவரி மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வரையில், இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

நாடு பூராகவும் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதுடன், குறித்த இடமாற்றங்கள் தொடர்பில் முறைப்பாடுகள் ஏதும் இருப்பின் அவற்றை முன் வைப்பதற்கான சந்தர்ப்பமும் வழங் கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், எதிர்வரும் டிசெம்பர் மாதம் 7 ஆம் திகதிக்கு முன்னர், அனைத்து முறைப்பாடுகளையும் முன்வைக்குமாறும், நீதிச் சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.(ஐ)

## பயமுறுத்துகின்றீர்களா? நான் 'கருணா அம்மான்'

**ஐ.தே.கவுக்கு அவர் எச்சரிக்கை**

கொழும்பு, நவ. 29

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவாளர்கள் சிலர் தன்னை பயமுறுத்த முயற்சிப்பதாக மஹிந்த அணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விநாயகமூர்த்திமுரளிதரன் தனதுடுவிட்டர்வலைத்தளத்தில் பதிவிட்டுள்ளார்.



பல்தகைக்குறுஞ்செய்திகள் அனுப்புவதுடன், தன்னுடன் அலைபேசியில் உரை யாட முயற்சிக்கின்றனர் எனவும் பதிவிட்டுள்ள அவர், தான் மட்டக்களப்பிலுள்ள கருணா அம்மான் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுமாறும், 2004ஆம் ஆண்டுக்கு முன்னர் கருணா அம்மான் யார் என்பதை கேட்டுத் தெரிந்துக்கொள்ளுமாறும் டுவிட்டர் வலைத் தளத்தில் பதிவிட்டுள்ளார். (ஐ)

## 1000 ரூபாவை வைத்து நாடகமாடவேண்டாம்

**தொண்டாவுக்கு முற்போக்கு கூட்டணி எச்சரிக்கை!**

கொழும்பு, நவ. 29

அரசுக்கான ஆதரவு மீள் பரிசீலனை, அமைச்சுப் பதவி துறப்பு என்றெல்லாம் அறிவிப்பு விடுத்து அரசியல் நாடகமாடாது, தோட்டத்தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா சம்பள உயர்வை பெற்றுக் கொடுக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை வலியுறுத்தியுள்ளார் தமிழ் முற்போக்கு கூட்டணியின் கண்டிமாவட்ட எம்.பி. வேலு குமார்.

அரசியல் நெருக்கடியால் நாட்டின் சுற்றுலாத்துறைக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்று கையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது –

ஜனாதிபதியின் சூழ்ச்சி நடவடிக்கையால் அரசியல் ரீதியில் இலங்கை அநாதையாக்கப்பட்டுள்ளது. ஒருமாதத்துக்கு மேலாக அரச நிர்வாகம் முற்றாக இயங்கவில்லை. அரசும் அமைக்கப்படவில்லை. இதனால் நாட்டின் பொருளாதாரம் சீரழிந்துவருகின்றது. சுற்றுலாத்துறைக்கு சமாந்தரமாக பெருந்தோட்டத்துறையும் அரசியல் குழப்பத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. சம்பள உயர்வு கிடைக்காததால் தோட்டத்தொழி லாளர்களும் திண்டாடிவருகின்றனர்.

கூட்டுஒப்பந்தத்தைப் புதுப்பிப்பதற்குரிய பேச்சுக்கள் தீவிரமாக இடம்பெற்று வந்தவேளையிலேயே சூழ்ச்சி மூலம் ஆட்சி கவிழ்க்கப்பட்டது. கலந்துரையாடலுக்கு தலைமைத்துவம் வழங்கிவந்த தரப்பினர் ஓடோடிச்சென்று, 'சூழ்ச்சி அரசை' ஆதரித்து, அமைச்சுப் பதவியையும் பெற்றுக்கொண்டனர்.

இவ்வாறு பதறியடித்துக் கொண்டு பதவியைப் பெற்றவர்கள், மஹிந்தவுக்கு வழங்கிய ஆதரவை மீளப்பெறுவது குறித்து பரிசீலனை செய்யப்படும், பதவி துறக்கப்படும் என்றெல்லாம் தற்போது அறிவிப்பு விடுத்துவருகின்றனர். ஓடோடிச் சென்று அமைச்சுப் பதவியை பெறுவதற்கு முன்னர் இது குறித்து சிந்தித்திருக்க வேண்டும். தோட்டத் தொழிலாளர்களுக்கு ஆயிரம் ரூபா வழங்கினால்தான் ஆதரவு என்ற உத்தரவாதத்தைப் பெற்றிருக்க வேண்டும். அவ்வாறு செய்திருந்தால் சமூகம் சார்பாக நாமும் பெருமை சேர்த்திருப்போம்.

இன்று உத்தியோகபூர்வமாக அரசாங்கமொன்று இல்லை. அமைச்சரவையும் சட்டரீதியாக இயங்கவில்லை. எனவே, சூழ்ச்சி அரசுக்கான ஆதரவை மீளப்பெறு வதாலோ அல்லது அமைச்சுப் பதவியை துறப்பதாலோ எதுவும் நடக்கப் போவதில்லை. ஆகவே, அரசியல் நாடகமெல்லாம் அவசியமில்லை.

மக்கள் வழங்கிய பேரம் பேசும் சக்தியை பயன்படுத்தி தீர்வை நோக்கி பயணிக்க முயற்சிக்க வேண்டும். ஆயிரம்ரூபா விடயத்தில் ஒரு அடியேனும் பின்வாங்கமுடியாது. அந்த இலக்கை நோக்கிப் பயணிக்க எமது ஆதரவையும் வெளியில் இருந்து வழங்க தயார் – என்றார். (ஐ)

## தள்ளாடுகின்றது பொருளாதாரம் இரட்டைச் சதமடிக்குமா டொலர்?

கொழும்பு, நவ. 29

அரசியல் குழப்பம் காரணமாக இலங்கையின் பொருளாதாரம் பாரிய அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளது. மறுபுறத்தில் ரூபாவின் பெறுமதியும் சரிந்துள்ளது.

மத்திய வங்கியினால் நேற்று வெளியிடப்பட்ட நாணயமாற்று வீதங்களின் அடிப்படையில், இலங்கை ரூபாவின் பெறுமதி 182. 2733 சதமாக வீழ்ச்சியடைந்துள்ளது. அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவுப் பெறுமதி 178 ரூபா 33 சதமாகப் பதிவாகின்றது.

அதேவேளை,வெளிநாட்டுமுதலீடுகளும் குறைவடைந்து வருகின்றன. அரசியல் நெருக்கடிக்குத்தீர்வுகாணப்படாவிட்டால் இந்நிலைமை மேலும் மோசமடையலாம் என பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

சுற்றுலாத்துறையும் பெரும் வீழ்ச்சியடைந்துள்ளது. நிர்வாக இயந்திரத்தை இயக்குவதற்குரிய எந்தவொரு சட்டமூலமும் கடந்த ஒருமாதகாலமாக நிறைவேற்றப்படவில்லை. (ஐ)

# காங்கிரஸ் மீண்டும் ஆட்சிக்கு வர இன்னும் 30 ஆண்டுகள் ஆகலாம்

## பிரதமர் நரேந்திர மோடி கிண்டல்

புதுடில்லி, நவ. 29

இன்னும் 25 அல்லது 30 ஆண்டுகளுக்கு பிறகு மத்தியில் மீண்டும் ஆட்சிக்கு வர காங்கிரஸுக்கு வாய்ப்பு கிடைக்கலாம் என்று தேர்தல் பிரசாரத்தின் போது பிரதமர் மோடி கிண்டலாகக் கூறியுள்ளார்.

முதலமைச்சர் வசுந்தரா ராஜே தலைமையில் பாரதீய ஜனதா ஆட்சி நடைபெற்று வரும் ராஜஸ்தான் மாநிலத்தில் அடுத்த மாதம் (டிசம்பர்) 7ஆம் திகதி சட்டசபை தேர்தல் நடைபெறுகிறது. தற்போது அங்கு தீவிர பிரசாரம் நடைபெற்று வருகிறது.

திங்களன்று பில்வாரா, பனேஷ்வர்தாம், கோட்டா ஆகிய இடங்களில் நடைபெற்ற பிரசார கூட்டங்களில் பிரதமர் மோடி பேசினார்.

காங்கிரஸ் கட்சி தனது ஆட்சிக்காலத்தில் கிராமப்புற மக்களுக்கும், விவசாயிகளுக்கும்



பெரிய அளவில் எதுவும் செய்து விடவில்லை. விவசாய விளை பொருள்களுக்குப் போதிய குறைந்தபட்ச ஆதரவு விலையை வழங்கி இருக்கலாம்.

பயிர் காப்பீட்டு திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்தி இருக்கலாம். ஆனால் காங்கிரஸ் அரசு செய்யவில்லை. காங்கிரஸ் கட்சி 55 ஆண்டுகள் இந்த நாட்டை ஆண்டு இருக்கிறது. ஆனால் கிராமங்களுக்கு குடிதண்ணீர், மின்சாரம், சாலைகள், கழிவறை வசதிகள் கிடைக்கவில்லை.

இன்னும் 25 அல்லது 30 ஆண்டுகளில் மத்தியில் மீண்டும் ஆட்சிக்கு வர காங்கிரஸுக்கு வாய்ப்புக் கிடைக்கலாம். (இதை அவர் கிண்டலாக கூறினார்.) அப்படி ஆட்சிக்கு வந்தால், சாலைகளுக்கு தார் கூட போட முடியாத நிலையில்தான் அவர்கள் இருப்பார்கள்.

பயங்கரவாதிகளுக்கும், நக்சலைட்டுகளுக்கும் எனது அரசு தக்க பதிலடி கொடுக்கிறது. ஆனால் நக்சலைட்டுகளை காங்கிரஸ் புரட்சியாளர்கள் என்று அழைப்பது டன் அவர்களை பாராட்டவும் செய்கிறது.– என்றார். (ஐ)

# பாகிஸ்தான் சார்க் மாநாட்டில் பங்கேற்க மோடிக்கு அழைப்பு



இஸ்லாமாபாத், நவ.29

சார்க் மாநாட்டில் பங்கேற்பதற்காக பாகிஸ்தான் வருமாறு இந்தியப் பிரதமர் மோடிக்கு, பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகம் அழைப்பு விடுக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

சார்க் மாநாட்டை இரு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஓர் உறுப்பு நாடு பொறுப்பேற்று நடத்தும். கடைசியாக 2014 ஆம் ஆண்டு காத்மாண்டுவில் நடைபெற்ற சார்க் மாநாட்டில் மோடி பங்கேற்றார். 2016 ஆம் ஆண்டு பாகிஸ்தானின் இஸ்லாமாபாத்தில் மாநாடு நடைபெற இருந்தது.

அந்த ஆண்டு செப்ரெம்பர் மாதம் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில், 19 இந்திய இராணுவ வீரர்கள் கொல்லப்பட்டனர். அதனால் இந்தியா மாநாட்டில் பங்கேற்க முடியாது என அறிவித்தது.

அதேபோல் வங்காளதேசம், பூட்டான், ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளும் பங்கேற்க மறுத்துவிட்டமையால் சார்க் மாநாடு நிறுத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில் இந்த ஆண்டு பாகிஸ்தானில் நடைபெற உள்ள சார்க் மாநாட்டில் கலந்துகொள்ளும்படி இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு அழைப்பு அனுப்பப்படும் என்று பாகிஸ்தான் வெளியுறவு செய்தி தொடர்பாளர் முகம்மது பைசல் கூறினார்.

# இந்தியாவின் தலைமைத் தேர்தல் ஆணையாளராக சுனில் அரோரா

புதுடில்லி, நவ. 29

இந்தியாவின் அடுத்த தலைமைத் தேர்தல் ஆணையாளராக ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி சுனில் அரோரா நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.




இவர், தலைமைத் தேர்தல் ஆணையாளராக எதிர்வரும் டிசெம்பர் 2ஆம் திகதி தமது கடமைகளைப் பொறுப்பேற்பார் எனவும் இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அடுத்தவருடம் நடைபெறவுள்ள நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் மற்றும் சில மாநிலங்களின் சட்டமன்றத் தேர்தல்கள் ஆகியவற்றை நடத்தும் பாரிய பணி இவரிடம் கையளிக்கப்படுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவின் தற்போதைய தலைமைத் தேர்தல் ஆணையாளர் ஓ.பி.ராவத்தின் பதவிக் காலம் எதிர்வரும் டிசெம்பர் மாதத்துடன் நிறைவுபெறவுள்ளமையால் புதிய தலைமைத் தேர்தல் ஆணையாளராக சுனில் அரோரா நியமிக்கப்படுவாரென மத்திய அரசு உத்தியோகப்பூர்வ அறிவிப்பை வெளியிட்டுள்ளதாக இந்திய தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

# கஜாவால் பாதிப்புற்றோருக்கு இலங்கை அகதிகளின் உதவி

சென்னை, நவ. 29



கஜா புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலங்கை அகதிகள் 2 லட்சம் இந்திய ரூபா மதிப்பிலான நிவாரணப் பொருள்களை வழங்கியுள்ளனர்.

கஜா புயலால் தஞ்சாவூர், நாகை, புதுக்கோட்டை உள்ளிட்ட 12 மாவட்டங்கள் கடுமையான பாதிப்புக்களுக்கு உள்ளாகியுள்ளன.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்தும் உதவிகள் வழங்கப்பட்டுவருகின்றன. இலங்கை அகதிகளும் அம்மக்களுக்கு உதவும் வகையில் நிவாரணப் பொருள்களை வழங்கியுள்ளனர்.

யுத்த காலத்தில் இலங்கையிலுள்ள யாழ்ப்பாணம், மன்னார், திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை, முல்லைத்தீவு உள்ளிட்ட பகுதிகளிலிருந்து வருகைதந்த 300 ஈழத் தமிழர் குடும்பங்கள் பொள்ளாச்சி, ஆழியாறில் அமைந்துள்ள இலங்கை அகதிகள் முகாமில் வசித்து வருகின்றனர்.

இம்முகாமில் வசிக்கும் இலங்கை அகதிகள் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரிசி, சர்க்கரை, பருப்பு, பிஸ்கெட், கொசுவர்த்தி, ரொட்டி, மெழுகுவர்த்தி, ஆடைகள், நாப்கின், தேயிலைத் தூள் உள்ளிட்ட பொருள்களை அனுப்பியுள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக இலங்கை அகதிகள் தெரிவித்துள்ளவை வருமாறு :-

யுத்த காலத்தில் இலங்கையிலுள்ள எமது வீடு, கால்நடைகள், நிலம் ஆகியவற்றை இழந்து அகதிகளாக தமிழகத்துக்கு வந்தபோது இம்மக்கள் எங்களை அரவணைத்து கொண்டனர்.

ஆகையால் அத்தகைய மக்கள் தற்போது கஜா புயலால் பாதிக்கப்பட்டு பெரும் இன்னல்களுக்கு முகம் கொடுத்துள்ளமையால் எம்மால் முடிந்த நிவாரண உதவிகளை அவர்களுக்கு வழங்கியுள்ளோம்.– என்றனர். (ஐ)

# டில்லி முதல்வர் வீட்டுக்குள் தோட்டாக்களுடன் மதகுரு

புதுடில்லி, நவ. 29

டில்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் வீட்டுக்குள் தோட்டாக்களுடன் வந்தவரால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

டில்லி, கெஜ்ரிவால் பகுதியிலுள்ள முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் வீட்டிற்கு, அவரைச் சந்திப்பதற்காக மதகுரு ஒருவர் கடந்த திங்கட்கிழமை வருகை தந்துள்ளார்.

இதன்போது அவரிடம் தோட்டாக்கள் காணப்பட்டமையால் பாதுகாப்புப் பணியிலிருந்த பொலிஸார் அவரைக் கைது செய்த



னர். இதனால் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து அவரிடம் விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டபோது, 'நான் ஒரு மசூதியில் பணியாற்றி வருகின்றேன். கடந்த மாதம் எனக்கு வந்த ஒரு நன்கொடைப் பெட்டகத்தில் இத்துப்பாக்கித் தோட்டாக்கள் இருந்தன. நான் அதனை எனது பணப்பையில் வைத்துக் கொண்டேன். ஆனால், அந்தத் தோட்டாக்களைப் பணப்பையில் வைத்த ஞாபகமின்றி முதல்வர் இல்லத்திற்கு வருகை தந்துவிட்டேன்" என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# 16 மண்டை ஓடுகள், எலும்புகள் ரயில் நிலைய சாக்கு மூடைக்குள்

## பீஹாரில் பரபரப்புச் சம்பவம்



இந்தியாவின் பீஹார் மாநிலம், சப்பாரா ரயில் நிலையத்தில் கிடந்த ஒரு சாக்கு மூடைக்குள் 16 மனித மண்டை ஓடுகள், 34 எலும்புகள் கண்டுபிடிக்கப்பட்டமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

கிழக்கு சம்பரன் மாவட்டத்தில் உள்ள சப்பாரா ரயில் நிலையத்தில் நேற்று முன்தினம் வழக்கம் போல் பொலிஸார் ரோந்து சென்றனர். அப்போது ஒரு சாக்கு மூடையில் ஏராளமான மனித மண்டை ஓடுகளும், மனித எலும்புகளும் இருப்பதைப் பார்த்து அவர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

இதையடுத்து, விசாரணை நடத்திய பொலிஸார் அப்பகுதியைச் சேர்ந்த சஞ்சய் பிரசாத் (வயது 29) என்பவரைக் கைது செய்தனர்.

இதுகுறித்து ரயில்வே போலீஸ் டிஎஸ்பி தன்வீர் அகமது கூறுகையில் –

சப்பாரா ரயில்நிலையத்தில் நேற்று காலை வழக்கம் போல் ரயில்வே பாதுகாப்புப்படையினர் ரோந்து சென்றனர். அப்போது சந்தேகத் துக்கு இடமான வகையில் ஒரு சாக்கு மூடை இருந்தது.

அந்த மூடையைப் பொலிஸார் பிரித்துப் பார்த்தபோது, அதில் 16 மனித மண்டை ஓடுகளும், 34 மனித எலும்புகளும் இருந்தன. மேலும் பூட்டான் நாட்டு கரன்ஸிகளும், பல்வேறு நாடுகளின் ஏ.டி.எம். கார்ட்டுகள், சிம் கார்ட்டுகள் இருந்தன.

இதையடுத்து அப்பகுதியில் பொலிஸார் விசாரணை நடத்தி, அந்த மூடையை அங்கு வைத்துவிட்டுச் சென்ற சஞ்சய் பிரசாத் என்பவரைக் கைது செய்தனர்.

அவரிடம் விசாரணை நடத்தியதில், கிழக்கு சம்பரன் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என்பது தெரியவந்தது. உத்தரப்பிரதேசம் பாலியா நகரில் இருந்து இந்த மனித மண்டை ஓடுகளையும், எலும்புகளையும் கொண்டு வருகிறார் எனவும், மேற்கு வங்கத்தின் ஜல்பைகுரி வழியாக பூட்டானுக்கு செல்கிறார் எனவும் தெரிவித்தார்.

# சிட்னியில் பேய் மழை; பெரு வெள்ளம்!



ஆஸ்திரேலியாவின் மிகப்பெரிய நகரான சிட்னியில் வரலாறு காணாத மழை பெய்து வருகிறது. ஒரு மாதத்தில் பெய்ய வேண்டிய மழை நேற்று ஒரே நாளில் பெய்ததால், சாலையில் மழை நீர் வெள்ளம்போல் பெருக்கெடுத்து ஓடியது.

இதனால் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது, பல்வேறு இடங்களில் மரங்கள் சாய்ந்தன, சுரங்கப் பாதைகளில் மழைநீர் புகுந்ததால், மக்கள் மிகுந்த சிரமப்பட்டனர்.

சிட்னியில் நேற்றுக் காலையில் இருந்து கன மழை பெய்து வருகிறது. இடி, மின்னல், காற்றுடன் கனமழை பெய்ததால் மக்கள் வெளியே நடமாட முடியாமல் பெரும் சிரமத்துக்கு ஆளாகினார்கள். அலுவலகத்துக்குச் செல்பவர்கள், பள்ளி, கல்லூரிக்குச் சென்றவர்கள் வீடு திரும்ப முடியாமல் பெரும் அவதிக்குள்ளானார்கள்.

ஒரு சில இடங்களில் மழை நிற்காமல் பெய்ததால், மழை நீர் சில மணிநேரங்களில் சாலையில் வெள்ளம்போல் ஓடியது. இதனால், சாலையின் ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்த கார்கள், இருசக்கர வாகனங்கள் அடித்துச் செல்லப்பட்டன. வழக்கமாக நவம்பர் மாதத்தில் 84 மில்லி மீட்டர் மழைதான் சிட்னி நகரில் பெய்யும். ஆனால், நேற்று ஒரே நாளில் மட்டும் 106 மி.மீ. மழை பெய்துள்ளது.

இதனால், சிட்னி நகரில் உள்ள சுரங்க ரயில்கள், ரயில்கள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டன. விமான நிலையத்தின் ஓடுபாதையில் நீர் சூழ்ந்ததால், பல விமானங்கள் ரத்து செய்யப்பட்டன. பல்வேறு விமானங்கள் வேறு நகரங்களுக்குத் திருப்பிவிடப்பட்டன.

கடும் மழை மற்றும் போக்குவரத்து நெரிசலில் சிக்கி ஒருவர் உயிரிழந்தார். மீட்புப் பணியில் ஈடுபட்டு இருந்த பொலிஸார் மீது மரங்கள் முறிந்து விழுந்ததில் இரு பொலிஸார் காயமடைந்தனர், ஒரு பெண் பொலிஸுக்கு காலில் எலும்பு முறிவு ஏற்பட்டது.

நேற்றுக் காலையில் இருந்து 12 பேரை மழையில் இருந்து மீட்டுள்ளனர் என மீட்புப்படையினர் தெரிவித்துள்ளனர்.

# ரஷ்ய எல்லையில் போர் பதற்றம் உக்ரைனில் இராணுவச் சட்டம்



கீவ்,நவ.29

ரஷ்யாவுடன் போர் பதற்றம் ஏற்பட்டுள்ள நிலையில், தனது எல்லை பகுதிகளில் இராணுவச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி உள்ளது உக்ரைன.

உக்ரைனின் ஓர் அங்கமாக இருந்த கிரிமியாவை ரஷ்யா 2014 ஆம் ஆண்டு தன்னுடன் இணைத்துக்கொண்டது. இதை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் கண்டித்தன. மேலும் ரஷ்யா மீது அவை பொருளாதாரத்தடையும் விதித்தன.

இந்த நிலையில் சர்ச்சைக்குரிய கிரிமியா பகுதியில் உக்ரைனின் 3 போர் கப்பல்கள் மீது ரஷ்யா துப்பாக்கிச்சூடு நடத்தி சிறை பிடித்தது. அவற்றின் பணியாளர்கள் காயம் அடைந்தனர்.

இதற்கு உக்ரைன் கடும் கண்டனம் தெரிவித்தது. இது ஆக்கிரமிப்பு முயற்சி என ரஷ்யாவைக் கண்டித்தது.

ஆனால் ரஷ்யாவோ, உக்ரைன் கப்பல்கள் தனது பகுதியில் அத்துமீறி நுழைந்தன எனவும், அதனால் தான் பலத்தை பயன்படுத்த வேண்டியதாயிற்று என்றும் பதிலடி கொடுத்தது.

2014 ஆம் ஆண்டு கிரிமியாவை ரஷ்யா தன்னுடன் இணைத்த பிறகு ரஷ்யாவும், உக்ரைனும் மோதிக் கொள்வது இதுவே முதல் முறை. அதனால் அங்கு போர் பதற்றம் நிலவுகிறது.

இதுபற்றி விவாதிப்பதற்கு நியூயார்க் நகரில் ஐ.நா. பாதுகாப்புச் சபை கூடியது. இந்தக் கூட்டத்தில் இவ்விவகாரம் விவாதிக்கப்பட்டாலும் ரஷ்யா முன்மொழிந்த திட்டம் ஏற்கப்படவில்லை. ரஷ்யாவுக்கும் மேற்கத்திய நாடுகளுக்கும் இடையே இதில் பெரும் கருத்து வேறுபாடு நிலவுகிறது.

ரஷ்யாவின் செயல், சர்வதேச சட்டத்தை மீறியது, இது ஆபத்தானது என அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மைக் பாம்பியோ தமது கண்டனத்தைப் பதிவு செய்தார். அமெரிக்க ஜனாதிபதி டிரம்பும் கண்டித்துள்ளார்.

இந்த நிலையில் உக்ரைனின் 27 பிராந்தியங்களில் 10 பிராந்தியங்களில் இராணுவ சட்டத்தை நடைமுறைப்படுத்த அந்த நாடு முடிவு எடுத்தது.

இவற்றில் 5 பிராந்தியங்கள், ரஷ்ய எல்லையில் உள்ளவை. 2 பிராந்தியங்கள், மோல்டோவாவில் இருந்து பிரிந்து வந்த டிரான்ஸ்–டேனிஸ்டர் பிராந்தியங்கள் (இங்கு ரஷ்ய படைகள் நிறுத்தப்பட்டுள்ளன), எஞ்சிய மூன்று பிராந்தியங்கள் கருங்கடல் பகுதியையொட்டியவை ஆகும்.

இங்கு இராணுவச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது தொடர்பான தீர்மானம், உக்ரைன் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் கொண்டு வந்து அனல் பறக்க விவாதிக்கப்பட்டது. முன்னதாக அந்த நாட்டின் அதிபர் போரோஷெங்கோ உணர்ச்சிவசப்பட்ட நிலையில் பேசினார். குறிப்பிட்ட பகுதிகளில் இராணுவச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டாலும் கூட, அடிப்படை சுதந்திரங்கள் பறிக்கப்படமாட்டா என அவர் உறுதி அளித்தார்.

அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி நடக்க உள்ள அதிபர் தேர்தலை, அதிபர் போரோஷெங்கோ நிறுத்தி வைக்கக்கூடும் என சில எம்.பி.க்கள் கருத்து வெளியிட்டனர். அதை அவர் மறுத்தார்.

அத்துடன், ரஷ்யா முழு அளவில் படையெடுப்பு நடத்தினால் தனக்கு நிலையான அதிகாரம் தேவை என அவர் வலியுறுத்தினார்.

அதிபர் போரோஷெங்கோ பேச்சுக்கு பின்னர் இராணுவச் சட்டம் நடைமுறைப்படுத்துவது தொடர்பான பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. அதில் தீர்மானத்துக்கு ஆதரவாக பெரும்பான்மையான (276) எம்.பி.க்கள் வாக்குப் போட்டனர்.

குறிப்பிட்ட பகுதிகளில் இராணுவச் சட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. அடுத்த மாதம் 27 ஆம் திகதி வரை ஒரு மாத காலத்துக்கு அது நடைமுறையில் இருக்கும்.

இந்த ராணுவ சட்டம், இராணுவ அனுபவம் உள்ள பொதுமக்களை ஒன்றுதிரட்டவும், ஊடகங்களைக் கட்டுப்படுத்தவும், பொதுமக்கள் கூட்டங்களைக் கட்டுக்குள் வைக்கவும் அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்குகிறது.

# டிரம்ப் - புடின் சந்திப்பு ரத்து? ரஷ்ய - உக்ரைன் பதற்றத்தால்



ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே கடல்பகுதியில் நடந்த மோதலை தொடர்ந்து ரஷ்ய அதிபர் புடினைச் சந்திப்பதாக இருந்த தனது திட்டத்தைத் தாம் ரத்துச் செய்யக்கூடும் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று உக்ரைனின் மூன்று கடற்படை கப்பல்களை தாக்கி அவற்றை ரஷ்யா கைப்பற்றியது குறித்த முழுத்தகவல் அறிக்கையைப் படிப்பதற்குத் தான் காத்திருக்கின்றார் என வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகையிடம் பேசிய அதிபர் டிரம்ப் தெரிவித்தார்.

இந்த வாரத்தின் பிற்பகுதியில் வெய்னோ ஐரிஸில் நடக்கவுள்ள ஜி20 உச்சி மாநாட்டின் இடையே இவ்விரு தலைவர்களும் சந்திப்பதாக இருந்தது.

இதனிடையே உக்ரைன் மற்றும் ரஷ்யா இடையான பிரச்சினையில், யுக்ரேனை ஐரோப்பிய நாடுகள் ஆதரிக்க வேண்டுமென அமெரிக்கா வேண்டுகோள் விடுத்துள்ளது.

ரஷ்யா மீது கடுமையான தடைகள் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்று அமெரிக்கா விரும்புவதாக அந்நாட்டின் அரசுத்துறை பேச்சாளரான ஹீதர் தெரிவித்துள்ளார்.

உக்ரைன்–ரஷ்யா பிரச்சினை குறித்துத் தனது தேசிய பாதுகாப்புக்குழு அளிக்கவுள்ள அறிக்கை விரிவாகவும், முடிவைத் தீர்மானிக்கும் விதமாகவும் அமையும் என்று வொஷிங்டன் போஸ்ட் பத்திரிகையிடம் பேசிய டொனால்ட் டிரம்ப் குறிப்பிட்டார்.

"ஒருவேளை நான் புடினைச் சந்திக்காமல் போகலாம். ரஷ்யாவின் இந்த ஆக்ரமிப்பு தாக்குதல் எனக்குப் பிடிக்கவில்லை. இந்த ஆக்ரமிப்பு நடவடிக்கை எனக்கு பிடிக்கவில்லை" என்று டிரம்ப் தெரிவித்தார்.

முன்னதாக, கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று க்ரைமியா பிராந்தியத்தில் நின்று கொண்டிருந்த உக்ரைன் நாட்டின் மூன்று கடற்படை கப்பல்களை ரஷ்யா கைப்பற்றியது.

தங்களின் கப்பல்களில் ஒன்றை ரஷ்யா ஆக்ரோஷத்துடன் மோதியதாக உக்ரைன் கூறியது. ஆனால் தங்கள் கடல் எல்லைக்குள் அவை நுழைந்துவிட்டன என ரஷ்யா தெரிவித்தது.

இதனைதொடர்ந்து உக்ரைன் தலைநகர் கீவில் உள்ள ரஷ்ய தூதரகத்துக்கு வெளியே பலர் திரண்டனர். அவர்கள் தீப்பந்தங்களை தூக்கி எறிந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



ரஷ்ய தூதரகத்துக்குச் சொந்தமான ஒரு வாகனம் தீயிட்டு கொளுத்தப்பட்டது.

இதனை தொடர்ந்து உக்ரைன் நாடாளுமன்றத்தில் அந்நாட்டின் குறிப்பிட்ட எல்லை பகுதியில் ஒரு புதிய ராணுவ சட்டத்தை அமல்படுத்துவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

ரஷ்யா தாக்குதல் நடத்த சாத்தியமான எல்லை பகுதிகளுக்கு இந்த புதிய 30 நாள் சட்டம் பொருந்தும் என்று யுக்ரேன் அதிபரான பெட்ரோ போரோஷென்கோ தெரிவித்தார்.

இந்த புதிய சட்டத்தின்படி போராட்டங்கள் மற்றும் வேலை நிறுத்தங்களை அதிகாரிகள் தடுக்கலாம். ராணுவ பணியாற்ற மக்களுக்கு அரசு உத்தரவிடலாம்.

இதற்கிடையே, ரஷ்யாவால் இணைப்பட்டுள்ள க்ரைமியாவின் கடற்கரை பகுதியில், ரஷ்யாவால் சுடப்பட்டு பின்கைப் பற்றப்பட்ட உக்ரைன் கப்பல்களில் இருந்தவர்களின் வாக்குமூலத்தை ரஷ்ய பாதுகாப்பு படை வெளியிட்டது.

பிடிப்பட்டவர்களில் ஒருவரான வொலோடிமிர் லிசோவ்யி, உக்ரைனின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் குறித்துத் தனக்குத் தெரியும் எனத் தெரிவித்துள்ளார்.

உக்ரைனின் கடற்படை கமாண்டர் அவர்கள் பொய் கூற வற்புறுத்தப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ளார்.

ஞாயிறன்று பிடிப்பட்ட 24 உக்ரேனியர்களையும் 60 நாள்கள் காவலில் வைக்குமாறு க்ரைமியாவில் உள்ள நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

மேற்கத்திய நாடுகள் ரஷ்யாவின் இந்த நடவடிக்கைக்குக் கண்டனம் தெரிவித்துள்ளது.

# அரசியல் தலைவர்களை மறந்து அரசுடன் நாம் பேச வேண்டும்



ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷ பிரதமரான பின்னர் இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகள் இலங்கை அரசியல் நெருக்கடி குறித்து பிரதான அரசியல் கட்சிகளுடன் நேரடியாகவும் மறைமுகமாகவும் பேசி வருகின்றன. ஜனநாயக மீறல் எனவும் இலங்கை அரசியல் யாப்புக்கு அமைவாக பிரதான அரசியல் கட்சிகள் செயற்பட வேண்டும் என்றும் கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள் வலியுறுத்தி வருகின்றனர். அறிக்கைகளையும் வெளியிட்டுள்ளனர். ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர்

**மைத்திரி, மஹிந்த, ரணில் என்று காலத்துக்குக் காலம் ஆளை மாற்றிக் குதிரை யோடும் அரசியலைக் கைவிட்டு இலங்கை அரசு என்ற கட்டமைப்பில் இருந்து ஈழத் தமிழர்களுக்கான அதிகாரங்களை அல்லது ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதற்கான நிலையை சர்வதேச மட்டத்தில் உருவாக்க வேண்டியதே இன்றைய தேவை.**

நாயகம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் தொலைபேசியில் உரையாடியுமுள்ளார். கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் உள்ள வெளிநாட்டுச் செய்தியாளர்களைச் சந்தித்து மைத்திரி விளக்கமளித்துமுள்ளார்.

இந்த நிலையில் நீடித்துச் செல்லும் அரசியல் நெருக்கடி குறித்து ஆராய ஐக்கிய நாடுகள் சபையின் அரசியல் விவகார திணைக்களத்தின் ஆசிய பசுபிக் விவகாரங்களுக்கான பணிப்பாளர் மரி யமஷிட்டா கொழும்பு வந்திருக்கிறார் என கொழும்பு அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

ஆனால் மரி யமஷிட்டா கொழும்பு வந்துள்ளமை குறித்து இலங்கை அரசாங்கம் அதிகாரபூர்வமாக எதுவுமே கூற வில்லை. இலங்கை அரச ஊடகங்களும் செய்தி வெளியிடவில்லை.

எனினும் ஆசிய பசுபிக் விவகாரங்களுக்கான பணிப்பாளர் மரி யமஷிட்டா அமெரிக்காவிலிருந்து இலங்கைக்கு வந்துள்ளமை குறித்து கொழும்பில் வெளிநாட்டுச் செய்தியாளர்கள் சிலர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

மைத்திரிபால சிறிசேன, ரணில் விக்கிரமசிங்க மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜே.வி.பி ஆகிய கட்சிகளின் தலைவர்களையும் கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகளையும் அவர் சந்தித்து உரையாடுவார் என்றும் கூறப்படுகின்றது.

ஆசிய பசுபிக் விவகாரங்களுக்கான பணிப்பாளர் மரி யமஷிட்டாவின் வருகையை கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதரகம் உறுதிப்படுத்தியுள்ளதாக கொழும்புச் செய்தியாளர் ஒருவரும் உறுதிப்படுத்தியுள்ளார்.

மரி யமஷிட்டா அரசியல் நெருக்கடிகள் குறித்த விடயங்களை கையாள்வதில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர். ஐக்கிய நாடுகள் சபையின் உயர் பதவிகளை வகித்துள்ளார்.

இதேவேளை, கனேடிய, பிரித்தானிய இராஜதந்திரிகளுடன் மஹிந்த ராஜபக்ஷ தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த சில நாள்களாக தொடர்ச்சியாக சந்தித்து உரையாடித் தமது அரசியல் நிலைப்பாடுகள் குறித்து விளக்கமளித்து வந்தனர்.

ரணில் விக்கிரமசிங்கவும் அவ்வாறு விளக்கமளித்து வந்துள்ளார்.

இந்த நிலையில் இலங்கையின் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்ணான்டோவை கொழும்பில் உள்ள அமெரிக்கத் தூதுவரும் இந்தியத் துணைத் தூதுவரும் கடந்த வாரம் சந்தித்து உரையாடியிருந்தார்.

2009 ஆம் ஆண்டு இறுதிப் போர் நடைபெற்றபோது இலட்சக்கனக்கான மக்கள் கொல்லப்பட்டும் காயமடைந்தும் இடம்பெயர்ந்தும் பல அவலங்களைச் சந்தித்திருந்தனர்.

ஆனால் அப்போது பதவியில் இருந்த மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் மீது மென் வலு அடிப்படையில் செயற்பட்ட அமெரிக்கா உள்ளிட்ட மேற்குல நாடுகளும் ஐக்கிய நாடுகள் சபையும் தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி விவகாரத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் அவசர அவசரமாகவும் செயற்பட்டு வருகின்றன என அவதானிகள் கூறியுள்ளனர்.







இந்து பசுபிக் பிராந்தியப் பாதுகாப்பு உள்ளிட்ட தமக்குரிய பூகோள அரசியல் தேவைகளின் பின்னணியில் இலங்கை அரசியல் நெருக்கடி விவகாரத்தில் அவை ஈடுபடுவதாகவும் அவதானிகள் கூறுகின்றனர்.

இந்திய மத்திய அரசின் ஆசீர்வாதத்துடன் இந்த நகர்வை ஐக்கிய நாடுகள் சபை முன்னெடுத்துள்ளது என்றும் மைத்திரி – மஹிந்த அல்லது ரணில் தரப்புக்களில் ஏதாவது ஒரு தரப்பை தமக்குரிய பூகோள அரசியல் நகர்வுகளுக்கு அமைவாக பதவியில் இருத்தும் முயற்சிதான் இந்த நகர்வு.

மாறாக, இலங்கையில் ஜனநாயகம் மீறப்படுகின்றது என்றோ அல்லது இலங்கை அரசியல் யாப்பு மீறப்படுகின்றது என்ற அக்கறையுடனோ இந்த நகர்வு அமையவில்லை.

20015 ஆம் ஆண்டு ரணில் அரசாங்கத்துடன் செய்யப்பட்ட அமெரிக்க – இலங்கை பாதுகாப்பு உறவுகள் காலவதியாகியுள்ள நிலையில் அந்த பாதுகாப்பு உறவுகள் மற்றும் தேவைகளின் பின்னணியிலும் இந்த சர்வதேச நாகர்வுகளைக் காண முடியும் என்றும் அவதானிகள் கூறுகின்றனர்.

இதேவேளை, இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகளின் தலையீடுகளை ஜே.வி.பி மற்றும் இடதுசாரி கட்சிகள் கண்டித்து வருகின்றன.

அதேவேளை கொழும்பில் உள்ள சீனத்தூதுவர் சென் ஷியுவான் செவ்வாய்க்கிழமை மஹிந்த தரப்பு வெளிவிவகார அமைச்சர் சரத் அமுனுகமவைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

மஹிந்த பிரதமராகப் பதவியேற்ற பின்னர் இடம்பெற்ற இரண்டாவது சந்திப்பு என்பதுடன் அரசியல் நெருக்கடியினால் சீன அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும் பேசப்பட்டதாக உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

பூகோள அரசியலின் பின்னணியில் செயற்பட்டு வரும் சீனா மற்றும் அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகள் இறுதிப் போருக்கு இராணுவ ஒத்துழைப்புகளை மகிந்த அரசுக்கு வழங்கியிருந்தன.

ஆனால் 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னரான ஒன்பது ஆண்டுகளில் நிரந்தர அரசியல் தீர்வு எதுவுமே இல்லாத நிலையில் சிங்கள அரசியல் தலைமைகளிடையே ஏற்பட்டுள்ள மோதல்களுக்கு தீர்வு காணும் முயற்சியில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஈடுபட்டுள்ளது.

ஆகவே சம்பந்தன், சுமந்திரன் ஆகியோரின் இவ்வாறான செயற்பாடுகளினால் ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டத்தை இலங்கைத் தேசிய அரசியலுடன் சர்வதேசம் ஒப்பிட்டுப் பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடிக்கான தீர்வுடன் தமிழர்களின் பிரச்சினைக்கும் தீர்வும் வந்துவிடும் என்று அமெரிக்கா போன்ற மேற்குலக நாடுகள் கருதுகின்றன போலும்.

இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பில் உள்ள ஜனநாயக மீறல்கள் குறித்தும் கடந்த 70 ஆண்டுகாலமாக

**இலங்கை ஒற்றையாட்சி அரசியல் யாப்பில் உள்ள ஜனநாயக மீறல்கள் குறித்தும் கடந்த 70 ஆண்டுகாலமாக இலங்கை அரசியல் யாப்புகளின் சட்டங்களினால் வடக்கு – கிழக்கு மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள், ஜனநாயக மற்ற சூழல் குறித்தும் தமிழ்த் தரப்பு எடுத்துக் கூறவில்லை என்று மக்கள் கவலையடைந்துள்ளனர் என அவதானிகள் கூறுகின்றனர்.**

இலங்கை அரசியல் யாப்புகளின் சட்டங்களினால் வடக்கு – கிழக்கு மக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் ஜனநாயக மற்ற சூழல் குறித்தும் தமிழ்த் தரப்பு சர்தேசதிற்கு எடுத்துக் கூறவில்லை.

இங்கே மைத்திரி, ரணில், மஹிந்த, சந்திரிக்கா அல்ல பிரச்சினை, பொதுவாக சிங்கள அரசியல் தலைவர்கள் அனைவருமே இலங்கை ஒற்றையாட்சி அரசமைப்பின் படிதான் செயற்படுகின்றனர். அதையே நியாயப்படுத்துகின்றனர்.

ஆகவே மைத்திரி, மஹிந்த, ரணில் என்று காலத்துக்குக் காலம் ஆளை மாற்றிக் குதிரையோடும் அரசியலைக் கைவிட்டு இலங்கை அரசு என்ற கட்டமைப்பில் இருந்து ஈழத் தமிழர்களுக்கான அதிகாரங்களை அல்லது ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப் பதற்கான சூழலை சவ்தேச மட்டத்தில் உருவாக்க வேண்டியதே இன்றைய தேவை.

சர்வதேச சமூகத்திற்கு அதைத்தான் சொல்ல வேண்டும். 2009 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னரான அரசியல் நிலை இதுதான். 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை கூட அந்தக் கொதி நிலை இருந்தது.

ஆனால், 2015 ஆம் ஆண்டு மைத்திரி – ரணில் அரசாங்கம் பதவியேற்ற பின்னரும் ஒக்ரோபர் மாதம் 26 ஆம் திகதிக்குப் பின்னரான சூழலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இலங்கைத் தேசியம், இலங்கையர் என்ற அடையாளங்களையே முன்னிலைப்படுத்துகின்றது.

நன்றி:- கூர்மை

# தற்போது உள்ள அரசு பைத்தியக்காரக் குழு



## ஜோன் அமரதுங்க சாடல்

கொழும்பு, நவ. 29
தற்போதைய அரசு ஒரு பைத்தியக்காரக் குழுவினராக மாறியுள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க கூறியுள்ளார்.

சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கூடிய நாடாளுமன்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்மேலும் குறிப்பிடுகையில்–

தற்போதைய அரசு ஒரு பைத்தியக்காரக் குழுவினராக மாறியுள்ளனர். 2015 ஆம் ஆண்டு முதல் எமது அரசு, நாட்டை பல்வேறு வழிகளிலும் முன்னேற்றும் செயற்பாடுகளையே செய்திருந்தது. இதற்கான எமக்கு ஓர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

ஆனால், அவர்கள் இதனை நிறைவேற்ற இடமளிக்கவில்லை. சுற்றுலாத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் இன்றைய அரசியல் நெருக்கடியால் ஸ்தம்பிதமடைந்துள்ளன.

ஜனாதிபதிதான் இதற்குப் பொறுப்பாவார். ஏன், ஜனாதிபதி சபைக்கு வராமல் இருக்கிறார்? குறை கூறுவதாயின் நேரடியாக சபையில் வந்து கூறவேண்டும். எதிர்வரும் வியாழக்கிழமை தான் இதன் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.

எமக்கு யார் அரசு அமைத்தாலும் பிரச்சினையில்லை. தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்றே நாம் குரல் கொடுக்கிறோம்.–என்றார். (ஐ)



# புதிய நாணயக் குற்றிகள் வெளியிட்டார் மஹிந்த!

கொழும்பு, நவ. 29
இலங்கை மத்திய வங்கியினால் நேற்று முன் தினம் 10 ரூபா, 5 ரூபா, 2 ரூபா மற்றும் 1 ரூபா புதிய நாணயக் குற்றிகள் வெளியிடப்பட்டன.

நாடாளுமன்றில் அமைந்துள்ள பிரதமர் அலுவலகத்தில் வைத்து பிரதமரும் நிதியமைச்சருமான மஹிந்த ராஜபக்ஷ இந்தப் புதிய நாணயக்குற்றிகளை வெளியிட்டார்.

பார்வைத் திறன் குறைப்பாடு உடையவர்களுக்கான விசேடமாக வடிவமைக்கப்பட்ட இந்த நாணயக் குற்றிகள், டிசெம்பர் மாதம் 3 ஆம் திகதி முதல் பாவனைக்கு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# சபை அமர்வை புறக்கணிக்க சபாநாயகர் கருவே காரணம்!

கொழும்பு, நவ. 29
சபாநாயகர் கரு ஜயசூரிய நிலையியற் கட்டளைக்குப் புறம்பாக செயற்பட்ட காரணத்தினால்தான் சபை அமர்வுகளை புறக்கணித்தோம் என அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

பிரதமர் தலைமையில் நேற்று முன் தினம் ஆளும் தரப்பினரின் கூட்டம் இடம்பெற்றது. நாடாளுமன்றில் சபாநாயர் செயற்பட்ட விதமானது அரசமைப்பு, மற்றும் நிலையியற் கட்டளைக்கு புறம்பாகச் செயற்பட்டார் என்பதைத் நாம் தொடர்ந்தும் தெரிவித்து வருகிறோம்.

இதனைத் திருத்திக்கொள்ளுமாறு நாம் கேட்டிருந்தோம். நிலையியற் கட்டளைக்கு இணங்கச் செயற்படுமாறு நாம் அவரை கோரியிருந்தோம்.




அவர், சுயாதீனமாகச் செயற்படவில்லை. மாறாகச் சிறிகொத்தாவின் சபாநாயகராகவே செயற்படுகிறார். இதனை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது. ஜனாதிபதியும், தவறான முறையில் நிறைவேற்றிக்கொண்ட பிரேரணைகளை வாபஸ் பெற்றுக்கொள்ளுமாறு அறிவித்துள்ளார்.

இதனாலேயே, நாம் அமர்வை புறக்கணித்துள்ளோம்–என்றார். (ஐ)

# சபரிமலை யாத்திரை புனிதப் பயணமானது

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கோரிக்கைக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, நவ. 29
சபரிமலை யாத்திரையை புனித யாத்திரையாகப் பிரகடனம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நேற்று முன் தினம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, வடக்கு அபிவிருத்தி, இந்துமத அலுவல்கள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்வைத்த விசேட அமைச்சரவைப் பத்திரத்திற்கே அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இம்மாதம் 17 ஆம் திகதி அமைச்சரைச் சந்தித்த கொம்பனித்தெரு ஸ்ரீ ஹரி ஹர சுதன் ஐயப்ப சுவாமிகளின் பிரதிக்குமார் தலைமையிலான யாத்திரைக் குழுவினர், சபரிமலை யாத்திரையை புனித யாத்திரையாக பிரகடனம் செய்ய அமைச்சர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இலங்கையிலுள்ள அனைத்து சபரிமலை யாத்திரை மேற்கொள்ளும் யாத்திரிகர்கள் சார்பில் விடுத்த கோரிக்கையை விரைவில் நிறைவேற்றித்தருவதாக உறுதியளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ஐ)



# கூட்டமைப்புக்குத் தெரிவுக் குழுவில் இடமளித்தது தவறு என்கிறார் பீரிஸ்



நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஜே.வி.பிக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்பட்டதற்கு ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் பேசிய அவர், 225 உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் தெரிவுக்குழுவின் 12 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு, ஒரு கட்சியில் குறைந்தபட்சம் 19 உறுப்பினர்கள் இருக்க வேண்டும். இதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஜே.வி.பி. ஆகிய கட்சிகளுக்கு பிரதிநிதித்துவம் வழங்கியது நியாயமற்றது என்று கூறியுள்ளார். (ஐ)

# வடக்கு ஆசிரியர் இடமாற்றம்; ஆளுநர் கடுமையான உத்தரவு

யாழ்ப்பாணம், நவ. 29
பின்தங்கியபிரதேசங்களுக்கு மாற்றம் வழங்கப்பட்டு இதுவரை கடமைகளைப் பொறுப்பேற்காதவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அமைச்சின் செயலாளருக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே உத்தரவிட்டுள்ளார்.

துணுக்காய் கல்வி வலயத்தின் அதிபர்களுடன் நேற்று முன்தினம் இடம்பெற்ற சந்திப்பின்போது அதிபர்களினால் ஆளுநரிடம் தெரிவிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய இந்த உத்தரவை அதிபர்கள் முன்னிலையிலேயே கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலன் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் ஆகியோருக்கு ஆளுநர் விடுத்தார்.

துணுக்காய் கல்வி வலயத்திற்கு 270 ஆசிரியர்கள் தேவையாக உள்ளனர். 31 நிரந்தர அதிபர்கள் இல்லாத பாடசாலைகள் இயங்குகின்றன. இங்கு 8 ஆயிரத்து 202 மாணவர்கள் கல்வி கற்கின்றனர் என வலயக் கல்விப்பணிப்பாளர் பி.ரவிச்சந்திரன் ஆளுநரிடம் தெரிவித்தார்.

இந்த நிலையில் கல்வி அமைச்சினால் கடந்த ஆண்டு 36 ஆசிரியர்களுக்கு துணுக்காய் கல்வி வலயத்திற்கு மாற்றம் வழங்கப்பட்டபோதும் 6 பேர் மட்டுமே கடமைகளை பொறுப்பேற்று இருந்தனர்.

எஞ்சியவர்கள் கடமைகளைப் பொறுப்பேற்காது இருக்கின்றனர். இவர்கள் கடமைகளைப் பொறுப்பேற்காத காரணத்தையும் இதற்காக உயர் அதிகாரிகள் அவர்கள் மீது எடுத்த நடவடிக்கை என்ன என்பது தொடர்பிலும் அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஆளுநர் கல்வி அமைச்சின் செயலாளருக்குப் பணித்துள்ளார்.

வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே, நேற்று முன்தினம் பிற்பகல் கிளிநொச்சி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலை அதிபர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பு வலயக்கல்விப் பணிப்பாளர் ரீ.ஜோன் குயின்ரஸ் தலைமையில் கிளிநொச்சி மகா வித்தியாலத்தில் நடைபெற்றது.

பின்தங்கியபகுதிகளிலிருந்து 2019ஆம் ஆண்டு வருடாந்த இடமாற்றம் செல்லும் ஆசிரியர்களுக்குப் பதிலாக ஆசிரியர்கள் கடமைகளைப் பொறுப்பேற்காத வரை அவர்களை பாடசாலைகளிலிருந்து விடுவிக்க வேண்டாம் என்ற கண்டிப்பான உத்தரவை ஆளுநர் பிறப்பித்தார்.

பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளிலிருந்து ஆசிரியர்கள் உடனடியாக மாற்றம் பெற்றுச் செல்கின்றபோதும் யாழ். வலயம் போன்ற வசதிகள் உடைய பாடசாலைகளிலிருந்து பின்தங்கிய பகுதிகளுக்கு ஆசிரியர்கள் செல்வது தாமதம் ஆவதால் மாணவர்களின் கல்வி நடவடிக்கை பாதிக்கப்படுகின்றது. இதனை கருத்தில் கொண்டு உங்களது பாடசாலையிலிருந்து ஓர் ஆசிரியர் மாற்றம் பெற்றால் அந்த இடத்திற்கு ஓர் ஆசிரியர் வரும்வரை பாடசாலை அதிபர்கள் ஆசிரியரை விடுவிக்க வேண்டாம் என்றும் ஆளுநர் கேட்டுக்கொண்டார். இதற்கு மேலதிகாரிகளோ அரசியல்வாதிகளோ அழுத்தம் பிரயோகித்தால் அது தொடர்பில் தம்மிடம் முறையிடுமாறும் ஆளுநர் அதிபர்களை கேட்டுக்கொண்டார்.

மேலும் பாடசாலை ஆசிரியர்களுக்கான விடுமுறைகளை வழங்கும்போது அவர்களுக்கான பதில் கடமையாற்றும் ஆசிரியர்களின் கைப்பட சம்மதக் கடிதங்களை வழங்க வேண்டும் என வலியுறுத்திய ஆளுநர், வெளிநாடுகளுக்குப் பயணம் மேற்கொள்ளும் ஆசியர்களுக்கான விடுமுறை காலத்தை மட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

ஆசிரியர்கள் பற்றாக்குறை காணப்படுவதாக விமர்சனங்கள் எழும் நிலையில் கடந்த ஆறு மாத காலப்பகுதியினுள் 450க்கு மேற்பட்ட ஆசியர்கள் வெளிநாடு மற்றும் பல்வேறு காரணங்களுக்காக தம்மிடம் விடுமுறை அனுமதி பெற்றிருப்பது கவலை அளிப்பதாகவும் தெரிவித்தார். இதனால் மாணவர்களின் கல்வி நடவடிக்கை மிகவும் பாதிக்கப்படுகின்றது. வடமாகாணத்தின் கல்வி முன்னேற்றத்திற்காக அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறும் அவர் கோரிக்கை விடுத்தார். (ஐ)




# நியூசிலாந்து அணிக்கு பாகிஸ்தான் பதிலடி!

மூன்று வகை கிரிக்கெட் போட்டிகளிலும் விளையாடுவதற்காக ஐக்கிய அரபு அமீரகத் திற்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற் கொண்டுள்ள நியூசிலாந்து கிரிக்கெட் அணி, தற்போது இறுதியாக நடைபெறும் டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது.

இந்த சுற்றுப் பயணத்தில் முதலாவதாக மூன்று போட்டிகள் கொண்ட ரி-20 தொடர் நடைபெற்றது. இதில் மூன்று போட்டிகளிலும் வெற்றிபெற்று பாகிஸ்தான் அணி தொடரைக் கைப்பற்றியது.

இதனையடுத்து, இரு அணிகளுக்கிடையி லான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர், நடைபெற்றது. இந்த தொடர் 1-1 என்ற கணக்கில் சமநிலைப் பெற்றது.

இதனைத் தொடர்ந்து, தற்போது இரு அணிகளுக்கிடையிலான மூன்று போட்டி கள் கொண்ட டெஸ்ட் தொடர் நடைபெற்று வருகின்றது. இதில் முதல் டெஸ்ட் போட்டியில், நியூசிலாந்து அணி 4 ஓட்டங்களால் திரில் வெற்றியை பதிவு செய்தது.

இந்நிலையில் இரு அணிகளுக்கிடையி லான இரண்டாவது டெஸ்ட் போட்டி நேற்று முன் தினம் நடைபெற்று முடிந்துள்ளது.

டுபாயில் கடந்த 24ஆம் திகதி ஆரம்ப மான இப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி, முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தது.

இதன்படி களமிறங்கிய பாகிஸ்தான் அணி, ஹரிஸ் சொஹைல் மற்றும் பாபர் அசாம் ஆகியோரின் அபார சதத்தின் துணையுடன் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 418 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை, தனது முதல் இன்னிங்சை இடைநிறுத்திக் கொண்டது.

இதன்போது, ஹரிஸ் சொஹைல் 147 ஓட்டங்களையும், பாபர் அசாம் 127 ஓட் டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் கொலின் டி கிராண்ட்ஹோம் 2 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனைதொடர்ந்து, பதிலுக்கு முதல் இன்னிங்சை தொடங்கிய நியூசிலாந்து அணி, யாசிர் ஷாவின் சுழலில் சிக்கி, 90 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதன்போது நியூசிலாந்து அணி சார்பில் மட்டும் ஆறு வீரர்கள் ஓட்டமெதுவும் பெறாத நிலையில் ஆட்டமிழந்தனர்.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்ட மாக கேன் வில்லியம்சன் 28 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். பந்து வீச்சில் யாசிர் ஷா 8 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதற்கமைய 328 ஓட்டங்கள் பின்னிலை யில் இருந்த நியூசிலாந்து அணியை, 'பலோ ஓன்' முறையில் துடுப்பெடுத்தாட பாகிஸ்தான் அணி அழைத்தது.

இதன்பிறகு 'பலோ-ஒன்' முறையில் இரண்டாவது இன்னிங்சை தொடங்கிய நியூசிலாந்து அணி, 312 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

இதன்படி, பாகிஸ்தான் அணி இன் னிங்ஸ் மற்றும் 16 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை, பாகிஸ்தான் அணி 1-1 என சமநிலைப்படுத்தி யது.

இரண்டாவது இன்னிங்ஸில் நியூசிலாந்து அணி சார்பில், ரோஸ் டெய்லர் 82 ஓட்டங்களையும், ஹென்றி நிக்கலோஸ் 77 ஓட்டங்களையும் அதிகபட்ச ஓட்டமாக பெற்றுக்கொண்டனர். பந்து வீச்சில் யாசிர் ஷா 6 விக்கெட்டுகளையும், ஹசன் அலி 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்.

இப்போட்டியின் ஆட்ட நாயகனாக இரண்டு இன்னிங்ஸிலும் மொத்தமாக, 16 விக்கெட் டுகளை சாய்த்த பாகிஸ்தானின் யாசிர் ஷா தெரிவு செய்யப்பட்டார்.

இரு அணிகளுக்கிடையிலான மூன்றா வதும், இறுதியுமான டெஸ்ட் போட்டி, எதிர்வரும் டிசம்பர் மாதம் 3ஆம் திகதி அபுதாபியில் நடைபெறவுள்ளது.

# ஜுவெண்டஸ் அணி தீவிர பயிற்சி

ஐரோப்பாவிலிருக்கும் உயர்தர உதைபந்து கழகங்களுக்காக நடத்தப்படும் சம்பியன்ஸ் லீக் உதைபந்து தொடர், தற்போது விறுவிறுப்புக்கு பஞ்சமில்லாமல் நடைபெற்று வருகின்றது.

இதில் 11 முறை சம்பியன் அணியான ரியல் மட்ரிட் அணி, ஐந்து முறை சம்பியனான பார்சிலோனா அணி, அட்லெடிக்கோ மட்ரிட் அணி, ஜுவெண்டஸ், மென்செஸ்டர் யுனைடெட், பரிஸ் செயிண்ட் ஜேர்மைன், லிவர்பூல் என 32 முன்னணி அணிகள் இத்தொடரில் பங்கேற்று விளையாடி வருகின்றன.

இதில் எட்டு குழுக்கள் பிரிக்கப்பட்டு அதில் நான்கு அணிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதற்கமைய போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் இத்தொடரில் பலம் பொருந்திய ஜுவெண்டஸ் அணியும், வெலன்சியா அணியும் பலப்பரீட்சை நடத்தவுள்ளன.

இதற்காக தற்போது ஜுவெண்டஸ் அணி தீவிர பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது.

இரசிகர்களின் உச்சக் கட்ட எதிர்பார்ப்புக்கு மத்தியில் இப் போட்டியானது, ஜுவெண்டஸ் விளையாட்டரங்கில் நடைபெற வுள்ளது.

ஜுவெண்டஸ் அணியை பொறுத்த வரை, அந்த அணி இத்தொடரில் பலம் வாய்ந்த அணியாகவே பார்க்கப்படுகின்றது.

இதேவேளை வெலன்சியா அணியில், பலம் வாய்ந்த வீரர்கள் உள்ள போதிலும் அந்த அணியால் எழுச்சி பெற முடியாமல் உள்ளது.

எனினும், இப்போட்டியில் அடுத்த சுற்றுக்கு முன்னேற வேண்



டுமாயின், வெலன்சியா அணி கட்டாய வெற்றியைப் பதிவு செய்ய வேண்டும்.

குழு 'எச்' பிரிவில் இடம்பெற்றுள்ள ஜுவெண்டஸ் அணி, தான் விளையாடிய நான்கு போட்டிகளில், மூன்று போட்டிகளில் வெற்றி யும், ஒன்றில் தோல்வியும் என 9 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.

வெலன்சியா அணி, தான் விளையாடிய நான்கு போட்டிகளில், இரண்டில் போட்டிகளில் வெற்றியும், ஒன்றில் தோல்வி, ஒன்றில் சமநிலை என 7 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளது.

இரு அணிகளுமே பலம் பொருந்திய அணிகள் என்பதால், இப்போட்டியின் விறுவிறுப்புக்கு பஞ்சமிருக்காது என எதிர் பார்க்கப்படுகின்றது.

# பங்களாதேஷ் பிரிமீயர் லீக் தொடரில் விளையாட ஸ்டீவ் ஸ்மித் ஒப்பந்தம்



ஆஸ்திரேலியா கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவரான ஸ்டீவ் ஸ்மித், பங்களாதேஷ் பிரிமீயர் லீக் ரி-20 தொடரில் விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

ஸ்டீவ் ஸ்மித், கோமிலா விக்டோரியன்ஸ் அணிக் காக விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் அணியில் இடம்பிடித்திருந்த பாகிஸ்தான் வீரர் சொயிப் மலிக்கிற்கு பதிலாக, ஸ்டீவ் ஸ்மித் அணிக்குள் உள்வாங்கப்பட்டுள்ளார் என அணி நிர்வாகம் தெரிவித்துள்ளது.

அணி நிர்வாகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் நாங்கள் ஸ்மித்தை ஒப்பந்தம் செய்துள்ளோம். அவர் நான்கு போட்டிக்குப் பிறகு அணியில் இணைவார் என்று நம்புகிறோம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேபோல மற்றொரு ஆஸ்திரேலிய வீரரான டேவிட் வோர்னர், இந்த தொடரில் சியால்ஹெட் சிக்சர்ஸ் அணிக்காக விளையாட ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

பங்களாதேஷ் பிரிமீயர் லீக் ரி-20 தொடர், எதிர் வரும் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி முதல் பெப்ரவரி 8ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தென்னாபிரிக்க அணிக்கெதிரான டெஸ்ட் போட்டியின்போது பந்தைச் சேதப்படுத்தியதற்கு, உடந்தையாக இருந்த குற்றத்துக்காக ஸ்டீவ் ஸ்மித், டேவிட் வோர்னர் ஆகியோருக்குச் சர்வதேச மற்றும் உள்ளூர் முதன்மையான தொடரில் விளையாட ஓராண்டு தடையும், பந்தைச் சேதப்படுத்திய பான் கிராப்டுக்கு 9 மாதங்கள் தடையும் விதிக்கப்பட் டது.

தடையைக் குறைக்க வேண்டும் என்று ஆஸ்தி ரேலியா வீரர்களின் சங்கங்கள் உட்பட பல்வேறு இடங்களில் இருந்து கோரிக்கை எழுந்தது. ஆனால், ஆஸ்திரேலியா கிரிக்கெட் சபை தடையை நீக்க மறுத்துவிட்டது.

இதனையடுத்து, வெளிநாட்டுத் தொடர்களில் விளையாட ஆர்வம் காட்டிய ஸ்டீவ் ஸ்மித், டேவிட் வோர்னர் ஆகியோர், கனடா மற்றும் கரிபியன் பிரிமீயர் லீக் தொடர்களில் விளையாடினர்.

இதுதவிர தற்போது பாகிஸ்தான் பிரிமீயர் லீக் தொடரில் விளையாடவும், பங்களாதேஷ் பிரிமீயர் லீக் ரி-20 தொடரில் விளையாடவும் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளனர்.

## படைகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் 11 பேர் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில், அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவைக் கைது செய்து நீதிமன்றில் நிறுத்துமாறு கோட்டை நீதிவான் குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு உத்தரவிட்டிருந்தார்.

நேற்று முன்தினம் அவருக்கு குற்றப்புலனாய்வுப்பிரிவு அழைப்பாணை விடுத்திருந்த நிலையில், அந்த விசாரணைக்கு முன்னிலையாகாத அட்மிரல் ரவீந்திர நேற்று நீதிமன்றில் முன்னிலையாகிச் சரணடைந்தார்.

சட்டத்தரணிகள் ஊடாக நீதிமன்றில் சரணடைந்த அவரிடம் வாக்குமூலம் பெறவேண்டும் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மன்றில் விண்ணப்பம் செய்தனர். அதனை ஏற்றுக் கொண்ட மன்று, குற்றப் புலனாய்வுப் பிரிவினர் அவரை அழைத்துச் செல்ல அனுமதியளித்தது.

அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தனவிடம் வாக்குமூலம் பெறப்பட்ட நிலையில் அவர் மீளவும் நேற்று மாலை.4.30 மணிக்கு நீதிவான் முன்னிலையில் முற்படுத்தப்பட்டார்.

அவரைப் பிணையில் விடுவிக்கச் சட்டத்தரணிகள் விண்ணப்பம் செய்தனர்.

கொழும்பில் 11 பேர் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கில் இரண்டாவது சந்தேகநபராக இணைக்கப்பட்டுள்ள அவரைப் பிணையில் விடுவிக்கக் குற்றப்புலனாய்வுப் பிரிவினர் ஆட்சேபனை தெரிவித்தனர்.

அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன சார்பான பிணை விண்ணப்பத்தை நிராகரித்த நீதிவான் ரங்கன தசாநாயக்க, சந்தேகநபரை வரும் 5ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

சந்தேகநபரைப் பிணையில் விடுவித்தால் விசாரணைகள் தடைப்படும் என்றும் நீதிவான் சுட்டிக்காட்டினார்.

**பின்னணி**

11 தமிழர்கள் கடத்தப்பட்டுக் காணாமல் போகச் செய்யப்பட்ட வழக்கில் தேடப்படும் முக்கிய சந்தேக நபரான நேவி சம்பத் எனப் படும், கடற்படை அதிகாரியை வெளிநாட்டுக்குத் தப்பிக்க உதவினார் என்று பாதுகாப்புப் படைகளின் பிரதானி அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது.

2006 தொடக்கம் 2008ஆம் ஆண்டுவரை கொழும்பு பகுதியில் கடத்தப்பட்ட 11 தமிழ் இளைஞர்கள் காணாமல் போகச் செய்யப்பட்டனர். இந்தச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்தி வரும் குற்றப் புலனாய்வுப் பிரிவு கடற்படை அதிகாரிகள் பலரைக் கைது செய்துள்ளது.

இந்த வழக்கில் தேடப்படும் முக்கிய சந்தேகநபரான கடற்படை புலனாய்வு அதிகாரியான நேவி சம்பத் எனப்படும், லெப். கொமாண்டர் சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி கொழும்பில், கடற்படை நலன்புரிப் பிரிவின் பணியாற்றிய வந்த போது, 2017 மார்ச் மாதத்துக்குப் பின்னர் தலைமறைவாகியிருந்தார். பின்னர் அண்மையில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

நேவி சம்பத் தப்பிச் செல்வதற்கு, கடற்படைத் தளபதியாக இருந்த அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன உதவினார் என்று குற்றப் புலனாய்வுப் பிரிவு நீதிமன்றுக்கு அறிவித்தது.

கடற்படையின் கணக்கிலிருந்து 5 லட்சம் ரூபா பணத்தையும் கொடுத்து, நேவி சம்பத் அதிவேகத் தாக்குதல் படகு ஒன்றின் மூலம் நாட்டை விட்டுத் தப்பிக்க அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன உதவினார் என்றும் குற்றச்சாட்டப்பட்டுள்ளது. (ஐ)

## ஊடகவியலாள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லையான, பாதுகாப்பு அதிகாரிகளின் பிரதானியான அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவை ஒளிப்படம் பிடித்த ஊடகவியலாளர் ஒருவர் பாதுகாப்பு அதிகாரியினால் தாக்கப்பட்டார்.

நேற்றுப் பிற்பகல் 2.15 மணியளவில், கோட்டை நீதிவான் நீதிமன்றத்துக்கு முன்பாக இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

நேற்று முற்பகல் நீதிமன்றத்தில் கடற்படைச் சீருடையில் சரணடைந்த அட்மிரல் ரவீந்திர விஜேகுணவர்த்தனவை பிற்பகல் 2.30 மணியளவில் சாதாரண சிவில் உடையில் நீதிமன்றத்துக்கு வருமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இதையடுத்து, பிற்பகல் 2.15 மணியளவில், நீதிமன்றத்துக்கு வெளியே வந்த அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவை ஊடகவியலாளர்கள் ஒளிப்படம் எடுக்க முற்பட்டனர்.

இதன்போது, அங்கு சிவில் உடையில் வந்த அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்னவின் பாதுகாப்பு அதிகாரி ஒருவர், ஊடகவியலாளர்களைத் தள்ளி விட்டார்.

அத்துடன், சண்டே மோர்னிங் இதழின் ஊடகவியலாளர் இந்திக ஹன்டுவாலாவின் மார்பில் குத்தி தாக்குதல் நடத்தினார். இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

இதையடுத்து, தாக்குதல் நடத்திய பாதுகாப்பு அதிகாரியை, அங்கிருந்த காவல்துறையினர் கைது செய்து நீதிமன்றத்துக்குள் கொண்டு சென்றனர். (ஐ)

## மாவீரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புகுந்த இனம் தெரியாத நபர்கள் வீட்டின் யன்னல் கண்ணாடிகள், கதவுகளை அடித்து நொருக்கியுள்ளனர்.

இது குறித்து பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மாவீரர் நாள் நிகழ்வுக்கான ஏற்பாடுகள் கடந்த பல நாள்களாக வடக்கு – கிழக்கில் நடைபெற்றன. கடும் எதிர்ப்புகள், அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் நேற்று முன்தினம் மாவீரர் நாள் நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன.

குறிப்பாக பருத்தித்துறை, சுப்பர்மடம் பகுதியில் மாவீரர் நாள் நிகழ்வைக் கொண்டாட ஏற்பாடு செய்யப்பட்ட நிலையில் அங்கு சென்ற இனந்தெரியாதோர் நிகழ்வைக் கொண்டாடவேண்டாம் என்றும், அதனையும் மீறிக் கொண்டாடினால் பாரிய விளைவுகளைச் சந்திக்க நேரிடுமென்றும் மிரட்டியுள்ளனர்.

ஆயினும் நிகழ்வை நடத்துவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு நிகழ்வு ஆரம்பமாவதற்குச் சில மணிநேரத்துக்கு முன்பாக அங்கு சென்ற பொலிஸார் துப்பாக்கி முனையில் அங்கிருந்தவர்களை மிரட்டிப் பொருட்களையும் அடித்து நொருக்கினர்.

இவ்வாறு தொடர்ந்தும் அச்சுறுத்தல்கள் விடுக்கப்பட்டு குழப்பங்கள் ஏற்படுத்தப்பட்ட போதும் அவற்றையெல்லாம் தாண்டி அப்பகுதி மக்கள் மாவீரர் நாள் நிகழ்வை நடத்தினர்.

இந் நிலையிலேயே அந்த நிகழ்வை முன்னின்று ஏற்பாடு செய்தவரின் வீட்டுக்கு நள்ளிரவு சென்ற இனந்தெரியாத கும்பல் அவரை வெளியே வருமாறு சிங்களமொழியில் அழைத்த போதும் வீட்டில் அவர்கள் இல்லை என்பதால், வீட்டை அடித்து நொருக்கி விட்டுச்சென்றுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-07)

## லீசிங்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விட்டு அவரது தங்க நகைகளை அறுத்துச் சென்றனர் என்ற குற்றத்துக்கு நிதி நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் இருவருக்கு ஒரு வருட கடூழியச் சிறைத் தண்டனை விதித்து யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் தீர்ப்பளித்தார்.

நிதி நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள், தவணைப் பணத்தை வசூலிப்பதற்கு ஒழுங்கு விதிகள் உள்ளன. அத்துமீறி வீட்டுக்குள் நுழைந்து அங்கிருந்த குடும்பப் பெண்ணை அச்சுறுத்தியுள்ளனர். அவர் அணிந்திருந்த தங்க நகையைக் குற்றவாளிகள் அபகரித்துச் சென்றுள்ளனர். அவர்களின் இந்த நடவடிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாதது.

இதனால் குடும்பப்பெண்ணை அச்சுறுத்திய குற்றத்துக்கு எதிரிகள் இருவரும் தலா ஆயிரம் ரூபா தண்டப் பணம் செலுத்த வேண்டும். குடும்பப் பெண் அணிந்திருந்த தங்க நகையை அபகரித்துச் சென்றதற்குக் குற்றவாளிகள் இருவருக்கும் ஒரு வருடக் கடூழிய சிறைத் தண்டனை வழங்கப்படுகிறது என்று யாழ்ப்பாணம் நீதிமன்ற நீதிவான் சின்னத்துரை சதீஸ்தரன் தீர்ப்பளித்தார்.

2016ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாத காலப்பகுதியில் யாழ்ப்பாணம் சுண்டுக்குழிப் பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் புகுந்த இருவர், அந்த வீட்டில் வசிக்கும் குடும்பத் தலைவரால் லீசிங் முறையில் பெற்றுக்கொள்ளப்பட்ட வாகனத்துக்கான தவணைப் பணத்தை அறவிடுவதற்கு வந்துள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.

எனினும் குடும்பத்தலைவர் வெளியில் சென்றிருப்பதாக அவரது மனைவி, நிதி நிறுவனத்தின் உத்தியோகத்தர்களிடம் தெரிவித்துள்ளார்.

அதனால் குடும்பப்பெண்ணை அவர்கள் அச்சுறுத்தியமையுடன், அவர் அணிந்திருந்த தங்க நகையையும் அறுத்து எடுத்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட குடும்பப் பெண் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார். பொலிஸாரின் விசாரணைகளின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட நிதி நிறுவனத்தின் உத்தியோகத்தர்கள் இருவரும் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர்.

விசாரணைகளின் சந்தேக நபர்கள் இருவரும் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டனர் அவர்களுக்கு எதிரான வழக்கும் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் நடைபெற்று வந்தது. பெண்ணை அச்சுறுத்தியதாக முதலாவது குற்றச்சாட்டும் அவர் அணிந்திருந்த தங்க நகையை அபகரித்துச் சென்றனர் என்று இரண்டாவது குற்றச்சாட்டும் சந்தேக நபர்கள் இருவருக்கும் எதிராக முன்வைக்கப்பட்டது.

சந்தேகநபர்கள் சார்பில் மூத்த சட்டத்தரணி முடியப்பு றெமிடியஸ் மற்றும் சட்டத்தரணி சர்மினி விக்னேஸ்வரன் ஆகியோர் மன்றில் முன்னிலையாகினர். குற்றப் பத்திரிகை மீதான விளக்கம் நிறைவடைந்தது.

இந்த நிலையில் தண்டனைத் தீர்ப்பு கடந்த திங்கட்கிழமை வழங்கப்பட்டது. (ஐ)

## ஆவா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

வாள்வெட்டு வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் மானிப்பாய், சுன்னாகம் உள்ளிட்ட பொலிஸாரால் தேடப்பட்டு வந்த அவருக்கு மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் பல வழக்குகள் நிலுவையிலுள்ளன.

அந்த வழக்குகளில் அசோக் மீது பிடியாணை உத்தரவுகள் நீதிமன்றால் வழங்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் சந்தேகநபர் நேற்று மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் தனது சட்டத்தரணி ஊடாக சரணடைந்தார்.

சந்தேக நபர் இலங்கையில் இருந்து வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றுள்ளார் எனப் பொலிஸாரால் முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 7ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் ஏனைய விடயங்கள் குறித்து அலட்டிக்கொள்ளமாட்டோம் என்று அமைச்சரவை இணைப் பேச்சாளரான தயாசிறி ஜயசேகர தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதில் பங்கேற்று கருத்து வெளியிடுகையிலேயே தயாசிறி மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

எதிர்வரும் 07 ஆம் திகதியே உயர்நீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பு வெளிவரவுள்ளது. ஜனாதிபதியின் முடிவு சரியென்பது உறுதிப்படுத்தப்படுமானால், பெரும்பான்மை குறித்தோ, நிதி அறிக்கைகள் சம்பந்தமாகவோ அலட்டிக்கொள்ளத் தேவையில்லை. நேரடியாகப் பொதுத் தேர்தலுக்கு சென்றுவிடலாம்.

தீர்ப்புக்காகவே நாமும் காத்திருக்கின்றோம். அது வெளியான பின்னரே தீர்ப்பின் பிரகாரம் அடுத்த கட்ட நகர்வுகள் முன்னெடுக்கப்படும்.

அதேவேளை, அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தின்படி பிரதமரை நீக்கவும் அமைச்சரவையை நியமிக்கவும் ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு. பொறுமை எல்லை மீறியதால் தான் ரணிலுடன் வேலை செய்ய முடியாமல் ஜனாதிபதி விலகினார்.

கொழும்புத் துறைமுகத்தின் ஒரு பகுதியை நாடொன்றுக்கு வழங்க முடியாதென ஜனாதிபதி சொன்னார். ஆனால் அந்த நாட்டுக்கு சென்ற ரணில் அதனை வழங்க உறுதியளித்திருந்தார். இப்படியான தவறுகள் நடந்தன.

நாடாளுமன்றத்தில் சபாநாயகர் ஐக்கிய தேசியக் கட்சிக்குச் சார்பாக செயற்படுகிறார். சபையின் இடது பக்கம் இருப்பவர்களே ஆளுங்கட்சியினர் என்று சபாநாயகர் நினைக்கிறார். அதனால் அவரை சபாநாயகராக நாங்கள் ஏற்க மறுக்கிறோம் – என்றார். (ஐ)

## சபாநாயகருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். குடாநாட்டின் பல இடங்களிலும் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடி நிலைமையில் சபாநாயகரின் செயற்பாடுகள் எமக்கும் பெருமை, நாட்டுக்கும் பெருமை எனத் தலைப்பிடப்பட்டே இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

இந்தச்சுவரொட்டியில் நாடாளுமன்றச் சம்பிரதாயங்கள், அதிகாரங்கள் மற்றும் மக்களின் அபிலாசைகளுக்கமைய நாட்டில் ஜனநாயகத்தை நிலைநிறுத்த அச்சமின்றி வீரத்துடன் கடமையாற்றியுள்ள சபாநாயகருக்கு நாட்டு மக்களின் ஆசீர்வாதங்கள் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ-07)

## மிரட்டல்களுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

மாவீரர் நினைவு தினக் கொண்டாட்டங்கள் தொடர்பாக எந்தச் சந்தர்ப்பத்திலும் அரசு அனுமதி வழங்கவில்லை என போலி அரசான மஹிந்த அரசின் தகவல் திணைக்களம் மிரட்டல் அறிக்கை விட்டிருந்தது. அத்துடன், வடக்கு, கிழக்கில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் இணைந்து மக்களை அச்சுறுத்தும் வகையில் கடந்த சில தினங்களாகச் செயற்பட்டனர். மாவீரர் நாள் நிகழ்வுக்குத் தடைகளை ஏற்படுத்தும் வகையில் அவர்களின் செயற்பாடுகள் அமைந்திருந்தன. எனினும், மிரட்டல்கள் – நெருக்குதல்கள் – அச்சுறுத்தல்களுக்கு – அடிபணியாமல் தடைகளைத் தகர்த்தெறிந்து மாவீரர்களை வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தாயக மக்கள் பகிரங்கமாக துயிலும் இல்லங்களில் நினைவுகூர்ந்துள்ளார்கள். இது எமக்குத் திருப்பதியை – மன நிறைவை – அளிக்கின்றது.

வடக்கு, கிழக்கு மக்களின் இந்தத் துணிகரத்தை நான் வரவேற்கின்றேன். நேற்று முன்தினம் நாடாளுமன்ற அமர்வில் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என்ற காரணத்தினால் எமது மக்களுடன் எழுச்சியுடன் அனுஷ்டித்த மாவீரர் நாள் நிகழ்வில் நான் நேரில் கலந்துகொள்ள முடியாமல் போய்விட்டது. இதற்கு வருத்தம் தெரிவிக்கின்றேன். எனினும், நான் தனிப்பட்ட முறையில் மாவீரர்களை கொழும்பில் நினைவுகூர்ந்துள்ளேன் – என்றார். (ஐ)

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவகாரங்களுக்கான பணிப்பாளர் மரி யமஷிட்டா அமெரிக்காவிலிருந்து அவசரமாகக் கொழும்பு வந்துள்ளார். இவர் வந்த கையுடன் நேற்று முன்தினம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையுடன் முக்கிய பேச்சு நடத்தியுள்ளார்.

கொழும்பில் தங்கியிருக்கும் காலத்தில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் பிரதமரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட இதர அரசியல் தலைவர்களை சந்திக்கவுள்ள இவர், தற்போதைய அரசியல் நெருக்கடி குறித்தும் அரசியல் பதற்ற நிலைமையை தணிப்பது பற்றியும் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

நேபாளம், ஜப்பான், குரோஷியா, அர்மேனியா உட்பட்ட நாடுகளில் ஐக்கிய நாடுகள் சபையின் உயர்பதவிகளை வகித்த இவர், அரசியல் நெருக்கடிகள் தொடர்பான விடயங்களைக் கையாள்வதில் தேர்ச்சி பெற்றவர் என்பதால் இலங்கை விடயத்தை நேரடியாகவே கையாள ஐ.நா. பொதுச்செயலாளரால் அனுப்பப்பட்டிருக்கக் கூடும் என்று பெயர் குறிப்பிட விரும்பாத மூத்த இராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார்.

ஐ.நாவே நேரடியாக தலையிட்டிருப்பதால் கொழும்பு அரசியல் வட்டாரங்களில் அடுத்து என்ன நடக்கும் என்பது பற்றி பரபரப்பாக பேசப்படுகின்றது. (ஐ)

## கெஹலிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடக்கம் நீக்கப்பட்டுள்ளார்.

அமைச்சரவைப் பேச்சாளரான அமைச்சர் மஹிந்த சமரசிங்க கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

இடைக்கால அரசில் இராஜாங்க மற்றும் பிரதி அமைச்சர்களின் பதவி செல்லுபடியாகாது எனக் கருதப்படுவதால், ஊடக மற்றும் டிஜிற்றல் உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் பதவியில் இருந்தும் கெஹலிய ரம்புக்வெல நீக்கப்பட்டுள்ளார் என்றும், மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

அமைச்சரவையில் அங்கம் வகிக்காத – இராஜாங்க அமைச்சரான ரம்புக்வெல, அமைச்சரவை பேச்சாளராக அறிவிக்கப்பட்டமை முன்னரே சர்ச்சைகளை ஏற்படுத்தியிருந்தது. (ஐ)

# சட்டபூர்வ அரசு இல்லையேல் ஜனவரியில் நாடு ஸ்தம்பிக்கும்

## மங்கள சமரவீர எச்சரிக்கை



கொழும்பு, நவ. 29

சட்டபூர்வமான அரசை உடனடியாக அமைக்க ஜனாதிபதி நடவடிக்கையெடுக்கவேண்டுமெனவும், அவ்வாறு செய்ய தவறினால் ஜனவரி மாதம் முதல் முழு நாட்டின் பொருளாதாரமும் ஸ்தம்பிதமடையும் எனவும் ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர எச்சரித்துள்ளார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றம் கூடியபோது தற்போதைய அரசியல் நெருக்கடி நிலைமை தொடர்பாக உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சிறிசேன – ராஜபக்ஷ சூழ்ச்சி காரணமாக உருவான சட்ட விரோத அரசு அமைக்கப்பட்டு ஒரு மாதம் கடந்துள்ளபோதும் அந்த அரசை உலகில் எந்தவொரு நாடும் இதுவரை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்நிலையில் இந்த அரசு டிசெம்பர் மாதத்திலும் தொடருமாக இருந்தால் நாடு கடும் நெருக்கடி நிலைமையைச் சந்திக்க நேரிடும்.

இன்னும் அடுத்த வருடத்திற்கான வரவு – செலவுத் திட்டமோ, இடைக்காலக் கணக்கு அறிக்கையோ சமர்பிக்கப்படவில்லை. இந்த நிலைமையின் கீழ் அடுத்த மாதத்தில் இரண்டு , மூன்று வாரங்களுக்குள் சட்ட பூர்வமான பிரதமர், அரசு மற்றும் அமைச்சரவை அமைக்கப்படாவிட்டால் ஜனவரி முதலாம் திகதி முதல் அரச சேவையாளர்களுக்குச் சம்பளத்தை வழங்க முடியாது போகும். ஓய்வூதியதாரர்களுக்குக் கொடுப்பனவுகளை வழங்க முடியாது போகும். அத்துடன் முழு நாட்டின் பொறி முறையும் ஸ்தம்பிதமடையும் – என்றார். (ஐ)

# ஐ.தே.கவின் பட்ஜெட் தோற்கடிப்பு

## மைத்திரி - மஹிந்த கூட்டாக வேட்டு

கொழும்பு, நவ. 29

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆளுகையின்கீழுள்ள கண்டி, கங்கவட்டகோரளைப்பிரதேச சபையின் 2019ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத்திட்டம் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சபையின் முதலாவது பட்ஜெட்டுக்கு ஆதரவாக 9 உறுப்பினர்களும், எதிராக 11 பேரும் வாக்களித்தனர். இதன்படி மேலதிக 2 வாக்குகளால் பட்ஜெட் நிராகரிக்கப்பட்டது.

சபையில் 21 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். 9 ஆசனங்களைக் கைப்பற்றிருந்த ஐ.தே.க., சுதந்திரக்கட்சியின் (02உறுப்பினர்கள்) ஆதரவுடன் ஆட்சியமைத்தது. இதனால், 9 ஆசனங்களைக் கைப்பற்றிருந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிரணியில் அமர்ந்தது. ஒரு ஆசனத்துடன் ஜே.வி.பி. நடுநிலை வகித்தது.

தற்போது பிரிந்திருந்த மஹிந்தவும், மைத்திரியும் இணைந்துள்ளதால், ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆப்பு வைக்கும் வகையில் பட்ஜெட் தோற்கடிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# எனது உயிருக்கு ஆபத்து உண்டு

## பிரத்தியேக பொலிஸ் பாதுகாப்புக் கோரி மைத்திரிக்கு விக்னேஸ்வரன் கடிதம்

யாழ்ப்பாணம், நவ. 29

பொலிஸ் மா அதிபருக்கு அறிகையிடப்பட்ட என்னுடைய உயிராபத்திற்கான காரணங்களை முன்வைத்து என்னுடைய தனிப்பட்ட பொலிஸ் பாதுகாப்பை அனுமதிக்குமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவருமான நீதியரசர் விக்கினேஸ்வரன் கடிதம் அனுப்பிவைத்துள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் ராஜபக்ஷ குடும்பம் மீதான கொலைச் சதியுடன் தொடர்புடையவர் என்ற குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக சில்வாதான் தன் மீதான கொலை முயற்சிக்கும் காரணமானவர் என்றும் விக்னேஸ்வரன் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:–

வடமாகாண முதலமைச்சராக என்னுடைய பதவிக்காலம் முடிந்ததன் பின்னர் என்னுடைய பிரத்தியேக பொலிஸ் பாதுகாப்பு அலுவலர்கள் தொடர்ந்து எனக்குப் பாதுகாப்பு வழங்கி வந்துள்ளனர்.

சில காலங்களுக்கு முன்னர் என்னுடைய உயிருக்கு ஆபத்து என்பது சம்பந்தமாக பொலிஸ்மா அதிபருக்கும் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபருக்கும் தெரிவித்திருந்தேன். அது சம்பந்தமான



செய்திகளை எமக்கு வழங்கியவர் அம்பலாங்கொடையைச் சேர்ந்த டி சில்வா என்பவர்.

நீங்கள் யாழ்ப்பாணம் வந்த போது உங்களுக்கும் தனிப்பட்ட ரீதியில் இது பற்றித் தெரிவித்திருந்தேன். இதில் சந்தேகத்திற்குரியவராகக் கணிக்கப்பட்டவர் தற்போது கைது பண்ணப்பட்டிருக்கும் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நாலக சில்வா என்பவர்.

மேற்படி உயிராபத்து சம்பந்தமாக பொலிஸ் மா அதிபரும் சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மாஅதிபரும் தெரிந்து வைத்துக் கொண்டிருந்த காரணத்தினால் அவர்களுக்கு இது பற்றி எழுத்தில் தெரிவிக்குமாறு கோரியிருந்தார்கள். இது என்னால் செய்யப்பட்டது.

இந்தக் கடிதத்தின் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. என்னுடைய இல்லத்திற்குரிய பாதுகாப்பு கைவாங்கப்பட்டதெனினும் என்னுடைய தனிப்பட்ட பொலிஸ் பாதுகாப்பு இற்றைவரை தொடர்ந்து வந்துள்ளது.

இன்று (நேற்று) காலை யாழ்ப்பாண பொலிஸ் தலைமையக மேற்பார்வையாளர் என்னுடைய பொலிஸ் பாதுகாப்பு அலுவலர்களை உடனே பொலிஸ் நிலையத்தில் வந்து கையெழுத்திடுமாறு கோரியிருந்தார்.

நான் தற்போது கொழும்பில் என்னுடைய பாதுகாப்பு அலுவலர்களுடன் தங்கியிருக்கின்றேன். எனினும் இரு அலுவலர்கள் இன்று (நேற்று) காலை யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் கையெழுத்திட்டுள்ளார்கள்.

பொலிஸ் மா அதிபருக்கு அறிகையிடப்பட்ட என்னுடைய உயிராபத்திற்கான காரணங்களை முன்வைத்து என்னுடைய தனிப்பட்ட பொலிஸ் பாதுகாப்பை அனுமதிக்குமாறு மேன்மை தங்கிய உங்களிடம் தயவாகக் கேட்டுக்கொள்கின்றேன். கிழக்கு மாகாண முன்னைய முதலமைச்சருக்கும் தற்போதும் பாதுகாப்பு வழங்கப்பட்டு வருவதாக அறிகின்றேன் – என்றுள்ளது. (ஐ)

# பிரிட்டனில் நடந்த மாவீரர் தின நிகழ்வில்







உலகத் தமிழர் வரலாற்று மையம், பிரித்தானியா, ஏற்பாடு செய்திருந்த மாவீரர் தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் ஒக்ஸ்போர்ட்டில் உணர்வுபூர்வமாக நடைபெற்றன. அன்று காலையில் ஆரம்பமான இந்த நிகழ்வில் எழுச்சி கீதங்களும், எழுச்சி உரைகளும் இடம்பெற்றன. தம்மினத்துக்காகத் தம்முயிரை ஈந்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

இலங்கை அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் நிறுத்துமாறு பிரித்தானிய நாடாளுமன்றத்தில் தீர்மானம் ஒன்றை நிறைவேற்ற வேண்டும் எனக் கோரி நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினால் பிரிட்டனில் முன்னெடுக்கப்பட்டு வரும் கையெழுத்து இயக்கத்தின் நடவடிக்கையும் அங்கு இடம்பெற்றது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் அமைச்சர் சொக்கலிங்கம் ஜோகலிங்கம், முன்னாள் போராளி யும் நாடுகடந்த அரசாங்கத்தின் குழு ஒருங்கிணைப்பாளருமான கமலசீசன் தியாகராஜா, ஒருங் கிணைப்பாளர் கிருஷாந்த், முக்கிய செயற்பாடாளர் பிரதீபன் அம்பலவாணபிள்ளை ஆகியோர் தலைமையில் மேற்படி திட்டம் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மாவீரர் துயிலும் இல்லத்தில் ஒலிபரப்பை தடுத்த பொலிஸ்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கண்டனம்



மட்டக்களப்பு, நவ. 29

மட்டக்களப்பு வாகரை கண்டலடி மாவீரர் துயிலுமில்லத்தில் நினைவேந்தல் அனுஷ்டிக்கத் தயாராக இருந்தவேளை பொலிஸார் ஒலிபரப்பை நிறுத்திய செயற்பாட்டுக்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசிய மக்கள் முன்னணி மட்டக்களப்பு தலைமையக பணியகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்களுடைய உணர்வுகளை மதிக்கத் தெரியாதவர்களாகவும், சிங்கள பௌத்த மேலாதிக்க மனநிலையோடும், இன மத வெறி கொண்ட மனோநிலையுடனும் பொலிஸார் செயற்படுகின்றமையை இந்தச் சம்பவம் வெளிப்படுத்தியுள்ளது.

சட்டம், ஒழுங்கை நிலை நாட்டவேண்டிய பொலிஸாரே இவ்வாறு மக்களுடைய உணர்வுகளை மதிக்காது செற்படுகின்றமை கவலையளிக்கிறது.

வாகரைப் பொலிஸாரின் இந்த மோசமான செயற்பாட்டை சர்வதேச சமூகம் கருத்தில் கொள்ளவேண்டும் – என்றார். (ஐ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.11.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.